



# ஞானச்சுடர்

## மலர்

ஆடி 2003





வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை



உ

# குறள் வழி

''செயற்பால செய்யாது இவறியான் செல்
உயற்பால (து) அன்றிக் கெடும்.'' (வம்

**பொருள் :-**

பொருளால் தனக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொள்ளாது அதன் மீது பற்றுவைத்துச் செலவிடாதவனது செல்வம் பின் எஞ்சாது பயனில்லாமல் கெட்டுவிடும்.

(437)



உ

# நற்சிந்தனை

## ஆசான் அருள்

கலிவிருத்தம்


ஆசான் அருளால் அகந்தை அழிந்தது
ஆசான் அருளால் அகங்கு விர்ந்தது
ஆசான் அருளால் அன்பு வளர்ந்தது
ஆசான் அருளால் ஆசானைக் கண்டிலன்

அளந்தேன் அருளால் பூதங்கள் ஐந்தும்
அளந்தேன் அருளால் ஐம்பொறி ஐந்தும்
அளந்தேன் அருளால் ஐம்புலன் ஐந்தும்
அளந்தேன் அருளால் ஆன்மாவை அறிந்தேன்

சிவதொண்டு செய்தல் செகத்திற் சரியை
சிவதொண்டு செய்தல் செகத்திற் கிரியை
சிவதொண்டு செய்தல் செகத்தில் யோகம்
சிவதொண்டு செய்தல் சிவஞானம் ஆமே

(தொடரும்...

# ஞானச்சுடர்



வெளியீடு :

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு—2 சுடர் 67

2003 ஆடி

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| தெய்வ வழிபாட்டின் அவசியம் | 1 - 3 |
| நமஸ்காரம் செய்தல் நம் | 4 - 5 |
| அருணகிரிநாதர் உணர்த்தும்...... | 6 - 9 |
| மனிதப்பிறவியின் மகத்துவம் | 10 - 12 |
| திருவருட்பயனின் வசனரூபம் | 13 - 15 |
| சேக்கிழார் சுவாமிகளின் வரலாறு | 16 - 19 |
| ஆத்திசூடி | 20 - 21 |
| வேண்ட முழுதும் தருவோய் நீ | 22 - 26 |
| நித்திய அன்னப்பணி...... | 27 - 30 |
| மானுடத்தை மேன்மைப்படுத்தும்...... | 31 - 34 |
| சந்நிதியான் | 35 - 39 |
| அரைநிமிடநேரம் | 40 - 41 |
| யோகதாஸன் பாடல்கள் | - 42 |
| மயில்வாகனம் சுவாமிகளின்...... | 43 - 44 |


அன்பளிப்பு:- மலர் ஒன்று 30/- ரூபா
வருடச்சந்தா தபால்ச் செலவுடன் 385/- ரூபா
சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினர்.

அச்சுப் பதிப்பு: அச்சகம் - சந்நிதியான் ஆச்சிரமம்
தொண்டைமானாறு

# "ஞானச்சுடர்"
# ஆனி மாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

சமாதான நீதிபதி சி. கிருஸ்ணபிள்ளை அவர்கள் மலருக்கான வெளியீட்டுரையை மேற்கொண்டார்கள். இவர் ஆச்சிரமம், பேரவை என்பன மேற்கொண்டுவரும் பல்வேறு பணிகள் பற்றியும் விபரமாக எடுத்துக்கூறினார்கள். மக்கள் நன்மைக்காக இவ்வாறு செயற்பட்டு வரும் இவர்கள் ஞானச்சுடர் சஞ்சிகையையும் தொடர்ச்சியாக வெளியிடுவது இவர்களுக்கேஉரிய தனித்துவமான சிறப்பு என்பதையும் சுட்டிக்காட்டினார்கள். இத்தகைய சூழ்நிலையில் வெளிவந்து கொண்டிருக்கும் மலரை வெளியீடு செய்துவைப்பதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைவதாகக் குறிப்பிட்டார்கள்.

## மதிப்பீட்டுரை:.

ஆசிரியர் திரு.செ. கந்தசத்தியதாசன்அவர்கள் மலருக்கான மதிப் பீட்டுரையை வழங்கினார்கள். ஆச்சிரமம் வயிற்றுப்பசியைப் போக் கும் பணியைமட்டும் மேற்கொள்ளாது ஞானப்பசியையும் போக்கி வருவதென்பது சாதாரண விடயமல்ல எனக்குறிப்பிட்டு இத்தகைய பணிகளை சிறப்பாக மேற்கொண்டு வருவதையும் அடியார்களுக்கு எடுத்துக்காட்டினார்கள்.

சந்நிதி ஆலயத்தின் தலபுராணம் மிக நீண்டகாலத்திற்கு முன்பு அருட்கவி விநாசித்தம்பி ஐயா அவர்களால் எழுதப்பட்டிருந் தது. அது அழிந்து போகும் நிலையில் இருந்தது என்றும் கூறலாம் அத்தகைய தலபுராணத்தை ஞானச்சுடர் மீண்டும் தொடராக வெளியிட்டதன் மூலம் அதனை அடியார்கள் வாசித்து பயன்பெற் றுள்ளதுடன் அந்தத் தலபுராணம் நிலைத்து நிற்பதற்கும் வழிஏற்பட் டுள்ளதென்பதை எடுத்துக்காட்டினார்கள்.

மலரில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் ஒவ்வொன்றையும் சுருக்கமாக மதிப்பீடு செய்த சத்தியதாசன் அவர்கள் ஆச்சிரமம் தொடர்பான பல்வேறு விடயங்களையும் உள்ளடக்கி வெளிவரு கின்ற ஞானச்சுடர் நல்லதொரு ஆவணமாகவும் இடம்பெறுகின்றது என்பதையும் எடுத்துக்காட்டினார்கள்.

# சுடர் தரும் தகவல்

பாடசாலையில் போதிக்கப்படும் கல்வி வாழ்க்கையுடன் இணைந்த கல்வியாக அமைய வேண்டுமென்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்ளுகின்றனர். பாலர் வகுப்புத் தொடக்கம் பல்கலைக்கழகம் வரை பாடத்திட்டங்களும் பாடப்போதனைகளும் இதற்கேற்றவகையிலேயே அமைந்திருக்க வேண்டுமென்று திட்டமிட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த வகையில் பாடசாலையில் போதிக்கப்படும் சமயபாடக் கல்வியும் வாழ்க்கைக்குப் பயன்பட வேண்டுமென்பதுடன் வாழ்க்கையுடன் இணைந்ததாகவும் அமைந்திருக்கவேண்டும் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டாலும் அதற்கான வாய்ப்புக்களும் வசதிகளும் அரிதாகவே காணப்படுகின்றன என்பதுடன் அதனை நடைமுறைப் படுத்துவதற்கான சிந்தனையும் செயற்பாடும் குறைவாகவே உள்ளன.

சிலதசாப்தங்களுக்கு முன்பு சைவப்பிள்ளைகள் கல்விபயிலும் பாடசாலைகள் ஆலயங்களுடன் தொடர்பு படுத்தப்பட்டு வெள்ளிக்கிழமைகளில் ஆலயத்திற்குச் சென்றுவருதல் மற்றும் திருக்கேதீஸ்வரம் போன்ற ஆலயங்களுக்கு கல்விப்பயணங்கள் மேற்கொள்ளுதல் போன்றவற்றை எல்லாம் மேற்கொண்டு வந்தனர். தற்பொழுது இந்தச்செயற்பாடுகள் எல்லாம் அரிதாகவே காணப்படுவது கவலைக்குரியவிடயங்களாகும்.

இந்தநிலமைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி பாடசாலைப் பிள்ளைகளையும் சமயநிறுவனங்களுடன் தொடர்புபடுத்தி இளம்வயதிலேயேஅவர்களை எமதுசமயம்தொடர்பாக மேற்கொள்ளப்படும் நல்ல விடயங்களைப் பார்ப்பதற்கும் அதில் பங்குபற்றுவதற்கும் சந்தர்ப்பம் வழங்குவதன் மூலம் சமயம் என்பதை அர்த்தம் உள்ள ஒரு விடயம் என்பதை அவர்களை உணரச் செய்து அதில் ஈடுபாடு உள்ளவர்களாக மாற்ற முடியும் என்பதை ஆச்சிரமமும், பேரவையும் நீண்டகாலமாகச் சிந்தித்து செயற்படுத்திவருகின்றது.

அதன் ஓர் அங்கமாகவே ஆச்சிரமத்தில் இடம் பெறும் வாராந்த வெள்ளி நிகழ்வுகளில் மாதம் ஒரு வெள்ளிக்கிழமை பாடசாலை மாணவர்களுக்காக வழங்கப்பட்டுள்ளது. இதில் பாடசாலைகள் ஆர்வத்துடன் பங்குபற்றி பயன்பெறுவது மகிழ்ச்சிக்குரிய விடயம் மட்டுமல்ல இதில் பங்குபற்றுகின்ற மாணவர்களது எதிர்காலச் சமயச்செயற்பாடுகளுக்கு இந்த வாராந்த வெள்ளி நிகழ்வு ஒரு களமாகவும் அமைந்துள்ள யதார்த்தத்தையும் அந்தமாணவர்களது வெள்ளி நிகழ்வுகள் வெளிப்படுத்துகின்றன.

உ

# வேலுண்டு வினைதீர்க்க

வேலுண்டு வினைதீர்க்க முருகா - எம்
விதிமாற்ற உன்னருட் காலூன்று முருகா
சேலுண்ட விழியானைக் கண்டு - தியங்கித்
திரிந்தாயே கிழமான வடிவுதனைக் கொண்டு

மாவின் கனியதனைக் கண்டு - ஞாலம்
வலமாக வந்தாயே மயிலதனைக் கொண்டு
நாவற் பழஞ்சுவைக்கக் கொடுத்து - பாட்டி
நற்றமிழைச் சுவைத்தாயே கேள்விபல தொடுத்து

ஊமைக் குழந்தையாய் வந்து - கீரன்
உரைக்குமே உரைகல்லாய் உருகினாய் கசிந்து
ஆமையுருக் கொண்டாரே அம்மான் - பழனி
ஆண்டியுருக் கொண்டுமே வந்தாயே பெம்மான்.

நீர்க்கரையில் இலைவீழ்ந்து புள்மீன் - ஆகி
நின்றிழுக்கக் கண்டுதவந் தவறியதாற் பூதம்
சீர்க்கீரன் ஆயிரமாய்ச் சேர - வைத்த
சிறைமீட்டாய் ஆற்றுப் படையதனைக் கேட்டு.

அருணகிரிக் கருள்செய்த முருகா - அவன்
அலங்காரம் பாடியே அணிசெய்தான் முருகா
திருப்புகழைப் பாடியே முருகா - உந்தன்
தெய்வீக லீலைகளைத் தெரிவித்தான் முருகா

திரு. சி. செல்லமுத்து

(தொடரும்...

உ

# ஆடி மாத சிறப்புப் பிரதி பெறுவோர் விபரம்

S. சண்முகநாதன்
( டென்மார்க் )

S. சக்திமித்திரன்
( நோர்வே )

திரு. ந. ரவீந்திரன்
( உதவி முகாமையாளர், மக்கள் வங்கி கன்னாதிட்டி யாழ் )

திரு வ. பாலசிங்கம்
( கிராம சேவையாளர், கரணவாய் )

திரு கு. மகாலிங்கம்
( சைவநீதி, கொழும்பு )

திரு ப. சிவராசா
( தூதாவளை, கரணவாய் )

திரு சி. இராமகிருஷ்ணா (ஆசிரியர்)
( வடமராட்சி / கணிதக்கல்வி மூலவள நிலையம் கரணவாய் )

திரு சி. நவரெத்தினம்
( துவாரகை கரணவாய் )

திருமதி நா. செல்வநாயகம்
( அரசவீதி, உரும்பராய் )

திரு வே. கிருஸ்ணபிள்ளை
( K. V. K. மில் உரிமையாளர், உடுப்பிட்டி )

திரு ம. ஸ்ரீகாந்தன்
( அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி )

அதிபர்
( அச்சுவேலி மகாவித்தியாலயம், அச்சுவேலி )

உரிமையாளர்
( கந்தசாமி புடவை நிலையம் சந்நிதி வீதி. அச்சுவேலி )

திரு M. P. தர்மலிங்கம்
( பத்திரிகை முகவர் உடுப்பிட்டி )

திரு பொ. வியாகேஸ் J. P
( நிர்வாகி பீக்கொன் கல்வி நிறுவனம் உடுப்பிட்டி )

திரு. மு. வைகுந்தவாசன்
( இலங்கை வங்கி, அச்சுவேலி )

திரு இ. சண்முகலிங்கம்
( பிரதான வீதி, தொண்டைமானாறு )

திரு S. விக்னேஸ்வரராசா
( சுப்ராங் தொலைத் தொடர்புச்சேவை. கதிரிப்பாய் )

திரு பொ. வெங்கடேஸ்வரன்
( நகரசபை, வல்வெட்டித்துறை )

திரு செ. தேவேந்திரநாதன்
( கணபதி வெதுப்பகம் உரும்பராய் )

உரிமையாளர்
( அம்பிகா நகை மாளிகை, 121 கஸ்தூரியார் வீதி யாழ் )

உரிமையாளர்
( நகுலா நகைமாடம் யாழ் )

உரிமையாளர்
( லிங்கம் சில்க்ஹவுஸ் யாழ் )

அருள்நங்கை சண்முகநாதன்
( புதிய உயர்கலைக் கல்லூரி யாழ் )

S. குணராசா
( தாளையடி லேன் திருநெல்வேலி )

அதிபர்
( யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை கஸ்தூரியார் யாழ் )

உ

# தெய்வ வழிபாட்டின் அவசியம்

க. சிவசங்கரநாதன்



**தா**யுமானார் இறைவனின் அருளாற்றலை வர்ணிக்கும் போது 'அந்தரத்து அகிலகோடி தாழாமல் நிலை நிற்கவில்லையோ' என புகழ்கின்றார். இவ் விஞ்ஞானி புராண இதிகாசங்களிற்குறிப்பிடுவதுபோன்று உலகங்கள் இத்தனைதான் என்று கூறாமல் அகிலாண்ட கோடி என்று கூறுமிடத்து இக்காலத்தில் சந்திரமண்டல யாத்திரீகர் கூட இப்பெரியாரின் மொழிகளை மறுக்கமுடியாததாய் உள்ளது. உலகம் என்று ஒன்று இருப்பின் அதில் உயிர் வர்க்கங்கள் இருந்தாக வேண்டும் என்பது விஞ்ஞானிகளின் கருத்து. விஞ்ஞானிகளின் கருத்து யாதாய் இருப்பினும் இப்பூவுலகில்வாழும் உயிர்களுள் மானுடப் பிறவி ஒன்றுதான் அனைத்திலும் சிறந்ததுஎன்பது அனைவருமே ஒப்புக்கொள்ளக் கூடிய உண்மையாகும்.

''அரிது அரிது மானுடராய்ப் பிறத்தல் அரிது ''. ஔவையார்

ஏழுவகைப் பிறவித் தோற்றங்களிலும் உயர்ந்தது இம்மானுடப் பிறவியேயாகும். இப்பூவுலகில் மற்றைய உலகங்களில் வாழத் தக்க ஆற்றலை அடைவதும் இப்பிறவியேயாகும் அன்றி இழிவான பிறவிகளிற் சென்று இன்னலுறத்தக்க அபாயமும் இப்பிறவியிலேயேதான் உண்டாகின்றது. அந்த அபாயத்தைத் தவிர்க்க மானுடனுக்கு இயல்பாகவே இறைவனருளால் அமைந்துள்ள பகுத்தறிவு உதவுகிறது.

இப்பகுத்தறிவு நமக்குப் போதிப்பது யாதெனில் உலக சிருஷ்டி கர்த்தனாகிய இறை

வனை அனவரதமும் சரணடைய வேண்டும். நம்மை அறிந்தோ, அறியாமலோ செய்யும் குற்றங்களுக்கு நாணி இறைவனிடம் மன்னிப்புக் கோர வேண்டும். இனியும் அத்தகைய குற்றங்கள் செய்யமாட்டோம் எனத் திடசங்கற்பம் செய்துகொள்ளவேண்டும் அறநெறி தவறத்தக்க சூழ்நிலை நமக்கு ஏற்படாமலிருக்குமாறு இறைவனைப் பிரார்த்தித்தல் வேண்டும். இவற்றையே ஆழ்வார்களும்நாயன்மார்களும் போதிக்க அவதரித்திருந்தனர் அவர்கள் வரலாற்றைப்பற்றி யாம் சிந்திக்க வேண்டும் செயற்பட வேண்டும்.

தெய்வ வழிபாட்டினால் மானுடன் புனிதமடைகின்றான் அது அவனுடைய கடமையாகின்றது ஒருவன் தனது கடமைகளை அன்றாடம் தவறாமற் செய்வானேயாகில் அதுவே அவனை உயர்த்துகின்றது. தாய், தந்தை, தமயன், குரு, அரசன் என்ற ஐவரும் ஐங்குரவர் எனப்படுவர். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது ஔவையின் வாக்கு. குழந்தைக்கு முதன் முதலில் தாய்தான் பாலூட்டி, சீராட்டி, நீராட்டி, தாலாட்டி, உணவூட்டிக் காப்பாற்றுகின்றாள். ஆகவே முதன்முதலில் குழந்தைக்குத் தென்படுபவள் தாய்தான். அப்பா, அம்மா, தாத்தா என்ற வார்த்தைகளை முதலில் அவளே கற்றுக்கொடுக்கிறாள் ஆதலினால்தான் தாய்சொல்துறந்தால்வாசகம்இல்லை என்றும் தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை எனவும் ஔவைப்பாட்டியார் கூறியருளினார்.

அடுத்து நமது உயர்வுக்காகப் பாடுபடுவர் தந்தையாவார். உயர்ந்த போதனைகளைப் புகட்டவும், உயர்ந்தோரின் உறவை ஏற்படுத்தவும் உடலுக்கும் உள்ளத்திற்கும் ஊறு ஏற்படாமற் பாதுகாக்கவும் பாடுபடுபவர் தந்தையாதலின் "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்றும் பாட்டியார் கூறியருளினார்.

உடன் பிறப்பு என்பது அரியதோர் பேறு ஆகும். உடன் பிறப்பில்லா உடம்பு பாழ் ஆதலின். சகோதரர்களுள் ஐக்ய பாவம் நிலவ வேண்டும். அண்ணன் நமது பக்க பலம் போன்றவன் இன்னல்கள் நமக்கு எது வரினும் சலியாமல் எதிர்த்து வெற்றி கண்டு நம்மைக் காப்பாற்றுகின்றான் அதனால் சகோதரரோடு சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை உத்தம வழிகளை வகுத்துத்தருபவரும் இறைவனை அடையும் வழியைக் கற்பிப்பவரும் குரு தான். குருமொழி கேளாத சீடனைப் பயனற்ற பொருள்கள் ஏழுள் ஒன்றாக விவேக சிந்தாமணி கூறுகின்றது. கடைசியாக அரசனை

நோக்குவோமாயின் அவனே பெரியோனாகக் கருதப்படுவான் ஏனெனில் பொது மக்கள் நீதி தவறாது நடந்துகொள்ள அவன் சட்ட திட்டங்களை வகுத்துத் தானும் அதன் படி நடந்து கொள்கிறான். ஆகவே, தேசப் பாதுகாப்புச் சட்டத்திற்கு விரோதமாக ஒழுகுதல் தவறு என்பது சொல்லாமலே விளங்கும். இந்த ஐங்குரவர்களுக்கும் கீழ்ப்படிந்து நடத்தல் நமது கடமைகளுட் சிலவாகும்.

இவ்வனைவருமே தெய்வத்தை வழிபடுகின்றனர். இதை ஆராயுங்கால் நாம் இப்புவியில் வாழ்ந்திருக்க இறைவனருள் அவசியமென்பது புலனாகின்றது. நாம் எந்தத்தெய்வத்தை வேண்டுமாயினும் வணங்கலாம். தெய்வம் நன்றே வேண்டுவோர்க்கு வேண்டும் வடிவத்தில் வேண்டுவன அளிப்பது தெய்வச் செயல் எங்கும் நிறைந்த இறைவன் நமது உள்ளத்தில் அறிவின் வடிவமாகப் பிரகாசிக்கின்றான் ஆதலினாலேயே தாயுமானாரும் '' சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே '' தேஜோமயானந்தமே என வழிபடுகின்றார்.

இது மட்டுமல்ல நாயன்மார்களதும் ஆழ்வார்களதும் வாழ்க்கையினைப் பற்றி யாம் பார்க்கும் போது தெய்வ வழிபாட்டின் அவசியம் நன்றாக உணர முடிகின்றது. இதனையுணர்ந்தே நமது முன்னோர்கள் கிராமந்தோறும் ஆலயங்களை அமைத்து வழிகாட்டிச் சென்றுள்ளனர். இதை உணர்ந்து மக்கள் நடந்தால் வாழ்வில் நல்ல பலனை அடையலாம்.

★★★

பகை, பொறாமை ஆகியவற்றை நீ வெளியிட்டால் வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்து விடும். வேறு எந்தச் சக்தியாலும் அவற்றைத் தடுத்து நிறுத்த முடியாது. ஒருமுறை நீ அவற்றை இயங்கும் படி செய்து விட்டால் அதனால் வரும் விளைவையும் நீ ஏற்றே ஆக வேண்டும். இதை நீ நினைவில் வைத்துக்கொண்டால் தீய செயல்களைச் செய்வதிலிருந்து அது உன்னைத் தடுத்து நிறுத்தும். ஒருவரிடம் ஒருவர் பொறாமை கொண்டு ஒருவரோடொருவர் சண்டையிடுவதற்குப் பதிலாக ஒருவரையொருவர் பூஜிப்போமாக.

— சுவாமி விவேகானந்தர்

★★★

★ ஒரு வினாடிப் பொறுமை பத்து வருட சுகம் ★

உ

# நமஸ்காரம் செய்தல் நம் ஆன்றோர் எமக்கு வகுத்த நல்ல பண்பாகும்

நீர்வைமணி

இறைவனை வழிபடும் போது எங்கள் எல்லோருக்கும் மேலானவனும், உலகில் உயர்ந்த, பரந்த சக்தி உடையவனும் என்பதை மனத்திற் கொண்டு தலைக்குமேலே கைகளைத் தூக்கி வழிபடுகின்றோம். முகஸ்துதிக்காக நமஸ்காரம் செய்து ஒருவரை வரவேற்கும்போது முகத்திற்கு நேராகக் கைகளைக் கூப்பிக் கும்பிடுகின்றோம். இதய அன்போடு ஒருவரை நமஸ்காரம் செய்யும் போது நெஞ்சுக்கு நேரே இரு கைகளையும் கூப்பி இதயத்தில் அவர் அன்பு நிலைக்கக் கும்பிட்டு வரவேற்கின்றோம்.

பெரியோர்களையும், ஞானிகளையும், பெற்றோரையும் அவர் பாதங்களில் விழுந்து நமஸ்காரம் செய்து ஆசிபெறுகின்றோம். இவ்விதமாகக் கைகூப்பி வழிபடுவது என்பது இந்து சமய தத்துவங்களில் மிக மிகச் சிறந்ததொரு பண்பாடாக விளங்குகின்றது. இந்தப்பண்பாடு பல்லாயிரமாண்டுகட்கு முன்பிருந்தே எம்மக்கள் மத்தியில் தொடர்ந்து வரும் வழமையும் பழக்கமுமாகவுள்ளது.

வழிபாடுகள் பலவிதமாக இருந்தபோதும் கைகூப்பி நமஸ்காரம் செய்வதென்பது பொதுவானதொரு சிறப்பம்சமாயுள்ளது. இது நம்முன்னோர் நமக்கு வகுத்துத்தந்த நல்ல உயர்ந்த, பக்குவமான பண்பாடாக இருப்பதைக்காணலாம். இது எக்காலத்துக்கும் பொருந்தக் கூடியதொரு செயற்பாடாகவும் உள்ளது.

எல்லோர் உள்ளத்திலும் இறைவன் குடியிருக்கின்றார். எனவேதான், எமது உடம்பை இறைவன் அமர்ந்து செல்லும் ரதம் எனக்கருதுகின்றனர்.

''உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்''

என அப்பர்பெருமான் அழகாகப் பாடி இருப்பதும் இதை விளங்க வைப்பதாக உள்ளது.

★ ஞான குருவைப் போல் நண்பர் பிறர் இல்லை. ★

ஆதலால் நாம் நமது உடம்பையும், உள்ளிருக்கும் உணர்வுகளையும், நல்லபடியாகப், பணிவுடனும், நல்லஎண்ணங்களுடனும், பக்குவமாக வழிப்படுத்தி ஒருவரை ஒருவர் மதிக்கவும், அன்போடு நேசித்து வாழ்வும் கற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு நமஸ்காரம் செய்தல் கைகூப்பி வழிபட்டு ஒருவரை ஒருவர் இன்முகத்துடன் வரவேற்று உபசரித்தல் என்பன சிறந்த பண்புகளாக ஆன்றோரால் எமக்கு வகுத்துத் தரப்பட்டுள்ளன.

இந்த அபூர்வமான எமது கலாச்சாரப் பண்பாடு பழக்கத்தில் வரும்போது எம்மிடமுள்ள அகம்பாவம், பகைமை உணர்வு, பொறாமை, சுயநலம் என்பன தாமாகவே விலகி விடுகின்றன எங்கள் மனத்தில் உயர்வு, தாழ்வற்ற பரந்தமனப்பாங்கு உருவாகின்றது

நமஸ்கரித்தல், வணங்குதல், கைகூப்புதல் என்று சொல்லப் படுவனபற்றி நன்கு சிந்திப்போமானால் இந்தச் செயற்பாடு எம்மை அடக்கமும், பணிவும் அமைதியும், நல்லபண்பாடும் கொண்டவராக மாற்றும் சக்தி உடையதென்பதை உணரலாம்.

இச்செயற்பாட்டினால் எம் மனத்தை அறியாமலே, எமக்கு ஒருவித அமைதி உணர்வும், ஆன்மீகபலமும் ஏற்படுவதை உணரலாம்.

சாதாரண வாழ்க்கை நடைமுறையிலே செல்லும் வழியில் கோவில்களைக் கண்டதும் வழிபடுவதும், பெரியோர்களைக் கண்டபோது கைகூப்பி அகமகிழ்தலும், நண்பர்களைக் கண்டால் இருகரமும் பற்றிக் கும்பிட்டுக் குதூகலிப்பது வாழ்க்கையில் மனநிறைவையும் சிறப்பையும் தருகின்றன வன்றோ.

எனவே நம் ஆன்றோர் நமக்கு வகுத்துத் தந்த நற்பண்பாட்டுப் பழக்க வழக்கங்களை என்றும் நாம் அனுசரிப்பதன் மூலம் வையத்தில் வாழ்வாங்கு வாழும் வகை தெரிந்து நல்வாழ்வு வாழ முயல்வோமாக

---

ஒருவன் இறைவனிடம் சரண்புகுந்தால் தவிர்க்க முடியாத விதியின் கட்டளைகளும் அகற்றப்படுகின்றன இத்தகைய மனிதனது தலை எழுத்தை விதியே தனது கரங்களால் துடைத்து விடுகின்றது.

ஸ்ரீசாரதாதேவி

---

★ எவரையும் மனம் நோகப் பேசாதே. ★

உ [தொடர்ச்சி...

# அருணகிரிநாதர் உணர்த்தும் தெய்வ உணர்வு கலந்த அற உணர்வு

கு. கனகரத்தினம்

அவ்வினைக் கிவ்வினையாமென்று சொல்லுமஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பது உந்தமக்கு ஊனமன்றோ
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறாதிரு நீலகண்டம்

என்னும் ஞானசம்பந்தப்பெருமானின் தேவார பாடலிற் காண்கின்றோம். கைவினை என்பது செய்யும் தொழில் அல்லது செய்யும் வினை. அதனைப் பிரான்கழல் வணங்கிச் செய்வதாற் செய்யும் வினைப்பயன் வந்து தீண்டாது என விளம்புகிறார் ஞானசம்பந்தப் பெருமான் இவ்வாறு செயலாற்றுவதால் பிறவிக்கு வித்தாகிய வினை அழிகிறது. காலாந்தரத்தில் இருவினையொப்பு மலபரிபாகம் உண்டாகிறது. அதனால் பேரானந்தப் பெருவாழ்வு வந்தெய்துகிறது. இவ்வாறு பெருநெறிக்கு இட்டுச்செல்லும் அருணகிரியார். வறியார்க்கு ஈதலை மேலும் மேலும் எடுத்துரைப்பதை அவர் பாடல்களிற் பார்க்கலாம்.

வேடிச்சிகொங்கை விரும்புங் குமரனை மெய்யன்பினாற்
பாடிக் கசிந்துள்ள போதே கொடாதவர் பாதகத்தால்
தேடிப்புதைத்துத் திருட்டிற்கொடுத்துத் திகைத்திளைத்து
வாடிக்கிலேசித்து வாழ்நாளை வீணுக்கு மாய்ப்பவரே (கந். அல)

இப்பாடலில் தேடிய பொருள் கையில் இருக்கும்போது பசியால் வருந்தும் வறியார்க்குக் கொடுப்பதை விடுத்துக்கொடாத பாவத்தால்திருட்டிற் கொடுத்துத் தவிக்கும் மக்களை நோக்கி இரக்கப் படுவதோடு கொடாமையால் விளையும் கேட்டினைச் சொல்லி விட்டுக் குமரனை உண்மை அன்போடு பாடுங்கள் ஏழைகள் பால் மனங்கசியுங்கள் கையிற் பொருள் உள்ளபோதே கொடுங்கள் எனச் சொல்லியிருப்பது கல்நெஞ்சங்களையும் கனியவைப்பதாக

அமைகின்றது பாடலில் இருக்கும் கசிந்து என்னும் சொல் மனம் கசிதலாகிய இரங்குதலைக் குறிக் கும் ஏழைகளைப் பார்த்து இரங்கு என்பதே அதன் முழுப் பொருளாகும். இதே கருத்தி னையே திருப்புகழிலும் ''உம்பர் தருதேனு மணிக்கசிவாகி'' என விளக்கமாகப் பாடியுள்ளார். இத் தொடரில்வரும். தரு, தேனு மணிமூன்றும் தேவர் உலகத்துக் குரியவை தருஎன்பது கற்பக விருட்சம் இதன் கீழ்ச்சென்று எதைப்பெற ஒருவர் நினைக்கி றாரோ அதனை அது உடனே கொடுக்கும். தேனு என்பது காம தேனு எனும்பசு. அதனிடம் சென்று எதனைக் கேட்பினும் அதனை உடன்கொடுக்கும் மணி என்பது சிந்தாமணி. அதனிடம் சென்று ஒருவர் எது வேண்டு மென்று சிந்திக்கிறாரோ சிந்தித்த பொருளை உடன் கொடுக்கும். இவை மூன்றும்இரக்கமே வடிவா னவை இவைபோல வறியார்க்கு இரங்கி அவரை ஆதரித்து நடக்க வேண்டும் என்பது அருணகிரி யார்பெருவிருப்பாகும். இது அவர் இருப்பவர்பாற் கொண்டுள்ள பெருங்கருணையைக் காட்டவில் லையா? இதுவரை மக்களுக்கு அற உரை சொல்லியவர் தன்மனத்துக் குச் சொல்வதுபோல எல்லோர் மனங்களுக்கும் உபதேசம்பண்ணு வதைக் காண்போம்.

கெடுவாய் மனமே கதிகேள் கரவா
திடுவாய் வடிவேலிறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவேதனை தூள்படவே
விடுவாய் விடுவாய் வினை யாவையுமே (கந். அநு)

இப்பாடலில் ஏமனமே! கெட் டொழியாதே உய்யும் வழி சொல்லுகின்றேன் கேட்பாயாக இரண்டு அறங்களைச் சொல்லு கின்றேன். ஒன்று பொருளை இரப்பவர்க்கு ஒளிக்காமல்கொடு மற்றது வடிவேற் பெருமானது திருவடிகளைத் தியானிப்பாய். இவ்வாறு செய்வாயாயின் தொடர்ந்து வருகின்ற பிறவித் துன்பம்ஒழியும். பிறவிக்குக் காரணமாகிய சஞ்சிதம், பிராரத் துவம் ஆகாமியம் ஆகிய வினை களின் பிடியிலிருந்தும் விடுபடு வாய் எனத் தம்பொருட்டுச் சொல்வது போன்று எல்லோர் மனத்துக்கும் சொல்வதைப் பார்க்கிறோம். இவ்வாறு அறவு ணர்வையும்தெய்வஉணர்வையும் மக்கள் மனத்தில் வளர்க்கிறார் அருணகிரிநாதர் இதுவரை அவர் பாடல்களிற் [illegible] கண்ட [illegible] திரும போதனைகள் யாவரையும் ஏழை களிடம் இரக்கப்படுமளவுக்கு நல் வழிகாட்டியுள்ளன அவ்வழியில்

★ முகஸ்துதிக்காரனை ஒருபோதும் நம்பாதே. ★

ஒழுகமுயல வேண்டியது நம் கடமையாகும்.

இன்றைய உலகில் இயற்கை அழிவுகளினாலும், போரினாலும் அல்லற்பட்டு அவதியுறும் மக்களைப் பற்றி அறிகின்றோம் அவர்களுள் நம்மவர்களும் அடங்குவர். அவர்கள் படும் துன்ப துயரங்கள் பல. அவர்கள் துயர் போக்கும் பணியிற் புலம் பெயர்ந்த தமிழ் மக்களுக்குப் பெரும்பங்குண்டு என்பதை உணர்ந்து உதவுவோரும் இருக்கிறார்கள். உணராது இருப்பவர்களும் இருக்கிறார்கள் புலம் பெயர் நாடுகளிற் கோவில் விழாக்கள், திருமணவைபவங்கள், பிறந்தநாட் கொண்டாட்டங்கள் என்பவற்றுக்குப் பெருந்தொகையான பணத்தைச் செலவிடுகிறார்கள். கோவில்களுக்கு கடவுள் பெயரால் கலசம் கலசமாகப் பால் கொடுக்கிறார்கள் அர்ச்சனை என்று முட்டிமோதுகிறார்கள் அல்லற்பட்டு அழும் மக்களுக்கு உதவுவதிற் பின்தங்கியவர்களாய் இருக்கிறார்கள். படமாடும் கோவில்களில் இருக்கும் ஈசனை நினைப்பவர்கள் நடமாடும் கோவில்களிலும் ஈசன் இருப்பான் என்பதை நினைக்கிறார்களில்லை. நடமாடும் கோவில் ஈசனைப் பேணுவதே மேலான பணி என்பதை உணரவேண்டும். ' என்கடன்பணி செய்து கிடப்பதே' என்று அறிவுரை செய்தார் அப்பர் பெருமான் இவ்வருள் வாக்கு எல்லோர் மனத்திலும் பதிய வேண்டும். அடுத்தவர் படும் துன்பத்திற் பங்கு கொள்ளவேண்டும். நம்மவர்படும் துயர் கேட்டு இரங்கி உதவ முன்வரவேண்டும்.

முற்காலத்தில் சித்தர்பலர் வாழ்ந்திருக்கிறார்கள் அவர்களில் ஒருவரான குதம்பைச் சித்தர்,

தாவாரமில்லை, தனக்கொரு வீடில்லை
தேவாரம் ஏதுக்கடிகுதம்பாய்

எனப்பாடியுள்ளார். இப்பாடல் சிந்தனைக்குரியது பாடலில் வரும் தா என்பதன் பொருள் வருத்தம். வாரம் என்பதன் பொருள் பங்கு. வீடு என்பதன் பொருள் விடுதலை இனி பாடலின் பொருளுக்கு வருவோம் பிற உயிர்கள் படும் வருத்தத்திற் பங்கு இல்லை என்றிருப்போர்க்கும் தமக்கு விடுதலை வேண்டாமென்றிருப்போர்க்கும் தேவனைப்பாடும் தேவாரம் ஏதுக்கு என வினாவுகிறார் தம்மைச் சார்ந்த உயிர்கள் வாழ்வுக்காக வருத்தப் பட்டுக்கொண்டிருக்க அவ்வுயிர்களின் துன்ப

துயரங்களிற் பங்கு கொள்ளாமலும் தமக்கு விடுதலையைப் பெற எண்ணாமலும் தேவாலயங்கள் தோறும் சென்று என்ன பயனைப்பெறப் போகிறாய் முதலில் பசிப்பிணியால் வருந்தும் ஏழைகளின் துயர் போக்கும் பணியினைச்செய்வாய். உலகப் பற்றிலிருந்து விடுபடுவாய் பின் தேவாரம் பாடலாம் என்று தான் சித்தர் பாடியிருக்கிறார். ''அற்றார் அழிபசிதீர் என்றார் வள்ளுவர் யாவர்க்குமாம் உண்ணும் பொழுது ஒரு கைப்பிடி'' கொடு என்கிறார் திருமூலர் 'வறிஞ்ஞர்க்கென்றும் நொய்யிற் பிளவளவேனும் பகிர்மின்'' என்றார் அருணகிரிநாதர் இவற்றை ஓர்ந்து உணர்ந்து உதவிக்கரம் நீட்டுவோமாக.

''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே''
(குடலவியனார்)

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை. திருவள்ளுவர்.

ஞானம் என்பது என்ன? அதனை வள்ளுவரும் ''எப்பொருள் எத்தன்மைத் தாயினும்'' எனும் குறள் மூலம் கோடி காட்டியுள்ளார் அதன் கருத்து '' யார் வாயிலிருந்து எந்த விடயத்தைக் கேள்விப் பட்டாலும் சரி, அந்த விடயத்திலுள்ள உண்மையான பொருளைக் கண்டுபிடிப்பது தான் அறிவு '' என்கிறார்.

ஆமாம்...! நம் காதில் விழுகிற செய்திகள் விஷயங்கள் எல்லாமே ஞானமல்ல அவற்றை எல்லாம் நம் சிந்தனையில் இருத்தி தேர்ந்து, தெளிகிறோமே அது தான் ஞானம்.

நாம் ஞானத்தைப் பெறவேண்டுமானால் பசும் பாலிலிருந்து நெய் எடுப்பதற்கு எவ்வளவு பிரயாசைப் படுகின்றோமோ அதே போலத் தான் நாம் ஞானத்தைப் பெறவேண்டும். அது போல் தான் எத்தனையோ அறிஞர்களிடம் இருந்தும் எத்தனை எத்தனையோ செய்திகளை நாம் 'கேட்டுப் பெறுகிறோம். அத்தனையும்' ஞானம் ஆகி விடாது ஆனால் அதற்குள் தான் ஞானம் இருக்கும் அந்த ஞானத்தை நாம் தான் தேடித்துருவி கண்டுபிடிக்க வேண்டும்.

★ மன்னித்து விடுதல் மிகப்பெரிய தண்டனை ஆகும். ★

உ

# மனிதப்பிறவியின் மகத்துவம்

இராசையா ஸ்ரீதரன்

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்றார் ஔவையார். கிடைத்தற்கரிய பெரும் பேறாகக் கருதப்படும் மானிடப்பிறவி மகத்தானஒன்று இந்தப் பிறவி மிகவும் புனிதம் வாய்ந்தது. மனிதப்பிறவி எடுத்த நாங்கள் அதன் புனிதத்தையும் மகத்துவத்தையும் உணர்ந்து செயற்பட வேண்டும். இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ, சொல்லவே முடியாது.

மனிதன் முதலில் மனிதனாக வாழப்பழக வேண்டும். மனித உருவில் இருந்துகொண்டு மிருகமாக வாழ்தல் கூடவே கூடாது. இன்றைய காலகட்டத்தில் மனிதன் பல்வேறு விதமான பழக்கவழக்கங்களைக் கொண்டிருக்கின்றான். விலங்குகளிடமும் பறவைகளிடமும் மனிதன் கற்றுக் கொள்ள வேண்டிய நல்ல பழக்கங்கள் பல உள்ளன.

## ஒற்றுமையே பலம்

காகம் ஓர் உணவுப்பொருள் கிடைத்தால் ஒரு போதும் தனியாக உண்ணாது காகங்கள் உணவைக்கண்டவுடனே கரைந்து தன் இனத்தை அழைக்கும் அது கேட்டுப் பல காகங்கள் பறந்து வரும். அதன் பிற்பாடுதான் கிடைத்த உணவை ஒன்றாக சேர்ந்து உண்ண ஆரம்பிக்கும் இந்தச் சிறப்பான குணாம்சத்தைக் கொண்டிருக்கின்றது காகம். 'ஒற்றுமையே பலம்' என்பதற்கு இலக்கணமாக விளங்குகின்றது காகம். ஆனால் மனிதன்?

எறும்புக் கூட்டத்தைப் பாருங்கள். எவ்வளவு சுறுசுறுப்புடனே ஒற்றுமையாகச் செயற்படுகின்றன. எறும்பூரக் கற் குழியும் என்பார்கள். அடிக்குமேல் அடிவைத்தால் அம்மியும் நகரும் என்றபடி இடைவிடாத முயற்சி எப்போதும் வெற்றியையே அளிக்கும். மனிதனாகப் பிறவி எடுத்த நாம் முதலில் நல்ல பழக்கங்களைப் பழகிக்கொள்ள வேண்டும். இந்த நல்ல பழக்கத்தால் பூமியில் நல்லவர்களாக வாழலாம்.

★ இரக்கம் காட்டு - ஆனால் ஏமாந்து போகாதே ★

## சிவப்பணி

" நல்லாரைக் காண்பதுவும் நன்றே" என்ற ஔவையார் அவரோடு ஒரு சேர இணங்கி இருப்பதனால் நன்மையே விளையும் என்கின்றார். வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த அருந்தலைவனாகத் திகழும் சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபாடு செய்வது பிரதான கடமையாகும் அதுவே எமது சைவசமயத்தின் சிவப்பணியுமாகும்.

' ஆலயந்தொழுவது சாலவுந் நன்று ' என்ற ஔவையின் கூற்றுக்கு ஈடுஇணையே கிடையாது. கோயில் இல்லா ஊரிற் குடியிருக்கவே வேண்டாம். எனவே, நாம் ஆலய வழிபாடு செய்தால்த்தான் ஆன்ம ஈடேற்றம் கிடைக்கும் ஆன்மாலயப்படும் இடம்தான் ஆலயம்; கோ என்றால் அரசன், இல் என்றால் வீடு. ஆகவே அரசன் இருக்கும் இடம்தான் கோயில் அதாவது இறைவனுடைய வீடு

## நல்லதையே செய்க

இப்பரந்த நிலவுலகுக்குக் கருத்தாவான சிவபெருமான் நம்மையெல்லாம்ஆட்கொள்ளும் நோக்கில் தானே சகலவற்றையும் நடத்தி வருகிறான். அவனுடைய அருளாட்சியினாலேயே நாம் இப்பூவுலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் அவர் தந்ததே தம்மை வழிபடுவதற்கேயாகும். அவனருளாலே அவன் தாள் வணங்குவதற்கேயாகும்.

எல்லாம் வல்ல இறைவனின் பாதாரவிந்தங்களை வழிபடுவதற்கு நாம் பூர்வஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும் எமது வாழ்நாளில் நல்லனவற்றைச்செய்து நல்லவர்களோடு பழகி, நல்லவர்களோடு வாழ்ந்து நம்மைப் பழக்கப் படுத்திக் கொண்டாலே நல்லது. அதுவே நன்மை பயக்கும். அவ்வாறு நல்வாழ்வு நமக்கு அமைய வேண்டுமாயின் நாம் நாட்டில் நல்லனவற்றைச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதற்கு நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டும்.

" புண்ணியமாம் பாவம் போம் போனநாட் செய்த அவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்தபொருள் "

என்றபடி நாம் நாம் செய்த வினைகள் நாமே அனுபவிக்க வேண்டும். நல்வினை செய்தால் நல்லனவற்றையும் தீவினை செய்தால் தீயவற்றையும் அனுபவிக்கலாம். நாம் ஒருவரைப் பார்த்து "அவனுக்கென்ன கொடுத்து வைத்தவன். அனுபவிக்கின்

றான்'' என்று கூறுகிறோமல்லவா! அதன் தாற்பரியம் என்ன? முற்பிறவியிலே நல்ல காரியங்களைச் செய்தால் இப்பிறவியில் நன்மை கிடைக்கும். ஆகவே, நல்ல செயல்களைச் செய்யாமல் காலங்கழித்தால் அதைவிடக் கொடுமை வேறில்லை. ஐந்தறிவு படைத்த மிருகங்களுக்கும் ஆறறிவு கொண்ட மனிதர்களுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கவேண்டும். பார்த்தால் மனித உருவம். ஆனால் வாழ்க்கையோ மிருகத்தை விடமோசமானதாக இருக்கும். இது எவ்வளவு அறிவீனம்!

## மகத்தான மனிதப்பிறவி

மனிதப்பிறவி ஒரு புனிதப்பிறவி ஆகவே அதன் மகத்துவத்தையும் மகிமையையும் அறிந்து நாம் நடக்க வேண்டும். நாம் வீட்டில் ஆசையோடு வளர்க்கும் பசு வைப்பார்த்து, ''அது வாயில்லா ஜீவன். அதுபாவம் அப்பா'' என ஒருவர் கூறுகின்றார் என்றால் அது உண்மையில் வாயில்லாத ஜீவனா? இல்லை. வாயிருக்கின்றது. அதனால் எம்மைப் போல்உரையாட முடியாது. அவ்வளவுதான் உணவு மட்டுந்தான் உண்ணமுடியும்.

இறைவனுக்கு வேண்டிய அபிஷேகத் திரவியங்களான பால், தயிர், நெய், கோசலம், கோமயம் முதலானவற்றைத் தருவது பசு. அந்தப் பசு ஒரு சாதுவான மிருகம். அதை நாம் வெட்டி உண்பது மிகவும் தவறான ஒரு செயல். பசுவதையைப் போல ஒரு கீழ்த்தரமான செயல் வேறு இல்லை என்றே சொல்லலாம்.

''கொல்லான் புலால் மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்''

என்பது தெய்வப்புலவர் திருவள்ளுவர் வாக்கு. ஒருயிரையும் கொல்லாமல் புலால் உண்ணாமல் எவன் ஜீவிக்கின்றானோ அவனை எல்லா உயிர்களும் கைகூப்பி வணங்கும் என்பது அவர் கூற்று. இறைவனால் படைக்கப்பட்ட ஜீவராசிகளைக் கொல்வதற்கு நமக்கு என்ன அருகதை இருக்கின்றது? நாம் யார்?

## அன்பே சிவம்

உலகில் அன்பு செலுத்தினால்த்தான் உண்மையாக வாழமுடியும். நாம் உண்மையாக வாழ்வதற்கு அன்பு செலுத்தவே வேண்டும். பிற உயிர்களிடம் நாம் அன்பு காட்டும் போது அவையும் நம்மிடம் நேசம் வைக்கின்றன. அதனால் பாசமும் நேசமும் உண்டாகின்றது. அவ்வாறு பரிவு ஏற்படும் போது பக்தியும் ஏற்படுகின்றது. அன்பே சிவம்; ஆதலால் அந்தப் பக்தி இறைவனிடம் செலுத்தப்படும் போது ஆன்ம ஈடேற்றம் கிடைக்கின்றது.

★ துணிவுடன் துணையும் இருத்தல் வேண்டும். ★

உ [தொடர்ச்சி ..

# திருவருட் பயனின் வசனரூபம்

## திருமதி மாதேவிப்பிள்ளை கதிர்காமத்தம்பி

இந்நிலையில் " கடவுள் ஒருவன் உளன். நம்மைப் பீடித்திருப்பது மலங்கள். அம்மலங்களின் நின்றும் நீங்கி நித்திய இன்பத்தை அடைவதே நாம் அடைய வேண்டிய நிலை " ஆகியவற்றை ஆன்மாக்கள் அறியாவண்ணம் மயக்கி வஞ்சிக்குந் தன்மையுடையது ஆணவ மலமே. எனவே உணரும் பான்மை தெரியாத தன்மை ஆன்மாக்களுக்குத் தந்தது ஆணவமலமே.

### ஆணவமலம் ஆன்மாவின் குணமன்று ஆன்மாவைப் பற்றி நிற்கும் குற்றமே

ஆணவமலம், நெல் மணியை மூடி நிற்கும் உமியும், செம்பிற் களிம்பும் போல, ஆன்மா என்று உளதோ, அன்றே ஆன்மாவைத் தொடர்ந்திருக்கின்றது. இம்மலத்தின் சேர்க்கையினாலேதான், உயிர்கள் மயக்கம், மதிப்பு, பெருமை, பொறாமை, வருத்தம், வாட்டம், ஆசை, ஆற்றாமை முதலியவற்றால் தாக்குண்டு வருந்துகின்றன.

ஆணவம் ஆன்மாவின் குணமானால், நெருப்பின் குணமான சூடு அழிந்தால், குணியாகிய நெருப்பும் அழிதல் போல, ஆன்மாவின் குணமான ஆணவம் முத்தி நிலையில் திருவருளால் வலிமை கெடும் போது, ஆணவத்தைக் குணமாகக்கொண்ட உயிரும் கெடுதல் வேண்டும். ஆயின் முத்தி நிலையில் ஆணவம் நீங்க உயிர் தனியே பேரின்பத்தை நுகர்வதால் ஆணவம் ஆன்மாவின் குணமன்று. ஆணவம் இயல்பாக அறிவுடைய ஆன்மாவின் அறிவை மயக்குந் தன்மையால் அது ஓர் குற்றமே.

### ஆணவம் ஆன்மாவுடன் இடையில் சேராது அநாதியிலேயே சேர்ந்துள்ளமை

ஆணவம் ஆன்மாக்களை அநாதியே பற்றி நிற்கின்றது. இடையில் வந்து சேர்ந்ததொன்றன்று. ஆணவம் இடையிலே வந்து ஆன்மாக்களைச் சேர்வதற்கு உயிரோடு உள்ள காரணம் ஏதும் இல்லை. இறைவனே ஆணவத்தைக் கூட்டி வைத்தான் என்றால், பேரருளுடைய இறைவன் ஆன்மாக்களுக்குத் துன்பஞ்செய்யக் கருதார் ஆண

★ மிகச் சிறந்த மனிதன் அன்புள்ளவன். ★

வம் தானே வந்து சேர்ந்ததோ என்றால், அது அறிவற்ற சடப் பொருள். ஆதலால் தானே வந்து உயிரைச் சேரமுடியாது. உயிர் அறிவுடைய பொருளாதலால் தனக்குத் தீமை செய்யும் ஆணவத்தைத் தானே தேடி அடையாது. எனவே ஆணவத்தை உயிரோடு சேர்த்து வைப்பதற்குரிய காரணமின்மையால் ஆணவம் உயிரை இடைவிட்டுச் சேர்ந்ததென்று கூறுவது பொருந்தாது.

சுத்தமான ஆன்மாவை, ஆணவம் இடையில் வந்து பற்றிய தாயின் உயிர் முத்தி அடைந்த பின்பும் அவ்வுயிரை ஆணவம் வந்து பற்றத்தக்கதாகும். முத்தி நிலையில் ஆணவம் ஆன்மாவைச் சேர்வதில்லை. ஆகவே ஆணவம் ஆன்மாவை இடையில் வந்து சேர்ந்ததன்று என்பது புலனாகும்.

## மாயை ஆணவத்தின் வலிமையைக் கெடுக்கும் கருவி

ஆணவ மலம் நீங்குவதற்பொருட்டே இறைவனால் ஆன்மாக்களுக்குத் தனு கரண புவன போகங்கள் கொடுக்கப்படுகின்றன. ஆயின் ஆன்மாக்கள் அவற்றை அனுபவித்து ஞானத்தைப் பெற மாட்டாதாயின், ஆணவம் ஒருபோதும் ஆன்மாவை விட்டு நீங்காது. எனவே தனு கரண புவன போகங்களைக் கருவிகளாகக் கொண்டு ஆன்மா ஆணவத்தை நீக்க முயலல் வேண்டும்.

## மாயை கன்மம் ஆகியவற்றின் தன்மைகள்

இராக் காலத்தில் பரந்து நிற்கும் இருளை விடியும் வரை சிறிது நீக்குவதற்கு உதவும் விளக்குப்போல, ஆன்மாவைப் பொருந்தி நிற்கும் ஆணவ இருளைச், சிவபெருமானுடைய ஞானம் என்னும் கதிர்கள் தோன்றிப் போக்கும் வரை, மாயையில் நின்றும் தோன்றும் தனு கரண புவனங்கள், ஆன்மா செய்யும் பாவபுண்ணியங்கட்கு ஏற்பப் பொருந்தி நின்று ஆணவ இருளைச் சிறிது போக்கத் தக்க அறிவினை ஆன்மாக்களுக்குக் கொடுப்பனவாம்.

ஆணவத்தின் தன்மைகளைத் தொகுத்துப் பார்க்கும் போது நிலையான உள் பொருள்களுள் ஆணவம் ஒன்றென்பதும், உலகின் கண்ணுள்ள பொருள்கள் எல்லாவற்றையும் மறைத்து நிற்கும் இருள் போல உயிர்களின் அறிவினை மறைத்து நிற்பது ஆணவ மலமே என்பதும் இருள் உலகிலுள்ள பொருள்களை மறைத்துத் தன்னையே காட்டி நிற்கும். ஆணவமலமோ தான் மறைத்து நிற்கும்

பொருளையும் காட்டாது, தன்னையும் காட்டாது என்பதும். அதனால் ஆணவம் இருளில் கொடியதென்பதும், இந்த ஆணவ மலம் உயிர்களின் அகத்தில் உள்ளொளியாய் விளங்குஞ்சிவத்தைச் சாராது, அநாதியே உயிர்களைப்பற்றி நிற்கும் என்பதும் ஆணவம் உயிர்களைப் புணர்ந்து நின்றும், உயிர்களுக்குத் தன்னைக் காட்டாது என்பதும் உயிர்கள் மெய்யுணர்வைப் பொருந்தாது, மயக்கத்தைப் பொருந்தி நிற்கும் தன்மையைக் கொடுத்தது ஆணவமே என்பதும், ஆணவமின்றேல் ஆன்மாக்களுக்குப் பிறவித்துன்பம் இல்லை என்பதும், ஆணவம் ஆன்மாவின் குணமல்ல என்பதும் ஆணவம் ஆன்மாவை இடையில் வந்து சேராது அநாதியே ஆன்மாக்களைப் பற்றி நிற்பதாகும் என்பதும் ஆன்மா தனு கரணம் முதலியவற்றைப் பெற்றபோதிலும் ஞான உணர்வு இன்றேல் ஆணவம் ஒரு பொழுதும் விட்டு நீங்காதென்பதும், இராக்காலத்தில் இருளைச் சிறிது நீக்க விளக்கு உதவுவது போல இறைவனின் திருவருளாகிய ஒளி தோன்றும் வரையும் ஆணவ இருளைச் சிறிது விலக்க மாயையின் நின்றும் தோற்றிய தனு கரண புவனம் முதலியன சிறிது அறிவைக் கொடுக்கின்றன என்பதும் பெற்றாம்.

**அன்பர்களே!** நிலையான ஆறு பொருள்களுள் ஒன்றாகிய ஆணவம் நமது அறிவினை மழுக்கி உண்மைப் பொருளை அறிய முடியாமற் செய்து, சிவத்தை மறைத்து, நமது பிறவித்துன்பங்களுக்குக் காரணமாகி நம்மை அநாதியாகவே பற்றி நின்று, ஞான உணர்வு நமக்குத் தோன்றுமட்டும், எம்மை விட்டு நீங்காத தாய், எம்மைப் பிறவித்துன்பங்களிலே அமிழ்த்தி வைக்கின்றதாயினும் இதனால் வந்த அறியாமையை நீக்க. ஞான ஒளி தோன்றும் வரையும், மாயையில் தோன்றிய தனு கரண புவனங்கள் சிறிது அறிவைக் கொடுக்கின்றன என்பதையும் உணர்வோமாக [தொடரும்...

---

உலகத்தில் கொடுப்பவனின் நிலையிலேயே நீ எப்போதும் நில் ஒவ்வொன்றையும் கொடுத்துவிடு பிரதிபலனாக ஒன்றையும் எதிர்பாராதே. அன்பைக் கொடு, உதவியைக் கொடு, பணியைக் கொடு உன்னால் இயன்றளவு சிறிதாவது கொடு. ஆனால் அதன் பொருட்டு விலை பேசுவதை ஒழித்து விடு நிபந்தனைகளை ஏற்படுத்தாதே. நம்மீது நிபந்தனை ஏதும் சுமத்தாமல் இறைவன் நமக்குக்கொடுப்பதைப் போல் நமது தாராள குணத்தால் நாமும் கொடுப்போமாக. தன்னுடைய சொந்த சுகவசதிகளை மட்டும் கவனித்துக் கொண்டு சோம்பல் வாழ்க்கை வாழும் சுயநலக்காரனுக்கு நரகத்தில் கூட இடம் கிடைக்காது.

---

★ உழைப்பை நம்பு ஆனால் கடவுளை மறவாதே. ★

உ

# சேக்கிழார் சுவாமிகள் வரலாறு

வை. க. சிற்றம்பலம்

சைவத் திருமுறைகளில், ஈற்றிலமைந்த, பன்னிரண்டாவது திருமுறையான, திருத்தொண்டர் பெரியபுராணத்தை, மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்கும்படி, அருமருந்தன்னவிருத்தப் பாடல்களினாலே பாடித்தந்த மெய்யடியார் சேக்கிழார் சுவாமிகள் ஆவார். பெருங் காப்பியத்துக்கமைந்த உறுப்புக்களெல்லாம் அமையப் பாடிய அதி உத்தம பெரியார் ஆவர். சொன்னயம், பொருணயம், கருத்தாழம் மிக்கதாகிய இப்புராணம் திருத்தொண்டராகிய அறுபத்து மூன்று நாயன்மார்களைப்பற்றி விரிவாக எடுத்து இயம்புகிறது. செந்தமிழ்ச் செல்வமாகிய இப்புராணம் சிவபக்தி அடியார் பக்தியெல்லாம் அமையவும் கேட்போர், படிப்போர் உள்ளம் உருகும் படியும் இலகுவாக விளங்கத்தக்க வகையிலும் உவமை நயம், அமையப் பாடப்பெற்றுள்ளது. இப்பெரியார் பற்றிச் சைவமக்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

தொண்டை மண்டலத்திலுள்ள குன்றத்தூரிலே சேக்கிழார் மரபிலே, வேளாண் மரபிலே அவதரித்த இப்பெரியாரின் பிள்ளைத் திருநாமம் அருண்மொழித்தேவரென்பதாம். கல்வியறிவொழுக்கங்களிலும் சிவபத்தியிலும்சிறந்திருந்த இவரை, அக்காலத்தவ்விடத் தரசனாக இருந்த அநபாய சோழமகாராசன் அழைத்து, அவருக்கு உத்தம சோழப்பல்லவன், என்னும் உயர் விருதினைச் சூட்டித், தம்முடன் சேர்ந்து அரசு செலுத்த உதவியாக வைத்துக் கொண்டான். இருவரும் அந்தச் சோழ நாட்டை ஆண்டுவருங்காலத்தில் தனது தலைவராகிய சோழன், சமணகாப்பியமாகிய சிந்தாமணியைக், கேட்டு வருதலைக்கண்டு, அரசனை நோக்கி அந்தக் காப்பியத்தைக் கேட்பதனால் இருபிறப்பிலும், கேட்போருக்கு ஒரு பயனுஞ் சேரப் போவதில்லை ஆனால், இரு பிறப்புக்குப் பயன் தரத்தக்கதாகிய சிவகதையையல்லவா கேட்கவேண்டும்: எனவுரைக்கக் கேட்ட அரசன். 'அப்படியானால் நீர் கூறும் சிவகதை என்ன? அதைக் கூறியது யார்?

★ எவரையும் மனம் நோகப் பேசாதே. ★

அதன் பயன் யாது? அவையெல்லாம் விளங்க நீரேயதை ஓதி உரைக்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டான். அஃதன்றி அந்தச் சிவகதையைப் பாடித் தரும்படி கூறி அவருக்கு அதற்கேற்ற திரவியங்களையுங் கொடுத்தான். சேக்கிழார் சுவாமிகள், இறைவனை வணங்கி விட்டு, தில்லையம்பலத்தை நோக்கி நடந்தார்.

சிதம்பரத்தை அணுகிக் கூத்தப் பெருமானை வணங்கி, வளவன் கூறியபடி, சிவனடியார் வரலாறுகளை, இங்கிருந்தே பாட வந்தேன். தேவரீர் அடியெடுத்துத்தரவேண்டும்' என்று விண்ணப்பஞ் செய்தார். அன்பரின் விண்ணப்பத்துக்கிணங்கிய நடராஜப் பெருமான் 'உலகெலாம்' என யாவருங் கேட்க அசரீதியாகத் திருவாய் மலர்ந்தருளினார். அதைத்திருவுளம் பற்றிய சேக்கிழார்- நம்பியாரூரர் பாடிய திருத்தொண்டத் தொகையையும் நம்பியாண்டார்நம்பி பாடிய திருத்தொண்டர், திருவந்தாதியையும் ஆதாரமாகக் கொண்டு ஒருசித்திரைத் திருவாதிரையிற் பாடத் தொடங்கியவர் அடுத்த சித்திரை திருவாதிரையன்று பாடிப் பூர்த்தியாக்கி, அரசனுக்கு அறிவித்தார். அவர் பாடிய விருத்தத்தொகை 4286.

அநபாய சோழமகாராசா, சேக்கிழார் சுவாமிகளுக்குப் பெரும் வரிசை செய்து தில்லை வாழந்தணர்கள் புடைசூழ, அவரையும், அவர்பாடிய ஏட்டுச் சுவடியையும் யானைமீதேற்றி மங்கல வாத்தியமியம்ப, அடியாரெல்லாம் ஆனந்தக் கூத்தாட, குடை கொடி ஆலவட்டம் நிழற்ற வீதியுலா விழா எடுத்தான். மிகப் பெரும் சிவபத்தரும் அருளாளருமாகி அடியவர்களின் வரலாற்றைக் கூறும் புராணமாதலால் இப்புராணம் பெரிய புராணம் எனப்படுகிறது. (பெரியர்+புராணம்)

இத்திருத்தொண்டர் புராணத்திலே இறைபக்தி அடியார் பக்தி, திருக்கோயில் வழிபாடு, செந்தமிழினிமை என்பன பொங்கித் ததும்புவதைக் காணலாம் ஒவ்வொரு அடியாரையும் ஆட்கொள்ளும் சிவபெருமான் அவரவருக்குத் தக்கபடி அவர்களைத் திருவடியிற் சேர்க்குமாற்றைச் சுவாமிகள் அழகாகப் பாடியுள்ளார்கள் நம்பியாரூரர், நம்பியாண்டார் பாடல்களை ஆதாரமாகக் கொண்டும் தமது அகக்காட்சியிற் கண்டவற்றையுஞ் சேர்ந்தே பாடியுள்ளார்; என்பதை உணரவேண்டும். பக்திரூபமாக இறைவனை வணங்கும் அன்பர்களுக்கு இப்பெரியபுராணம்பெரிதும் துணை செய்யும்.

இவ்வளவோடல்லாமல், சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர்,

சேக்கிழார் நாயனாரைப் பற்றிக் கூறும் ஒரு அற்புத வரலாற்றையும் இங்கே தருகிறேன்.

சிதம்பரத்திலே ஆனித்திரு விழா ஒன்றில் சுவாமி தரிசனம் செய்வதற்கெனச் சேர, சோழ, பாண்டிய அரசர்கள் வந்தனர். தொண்டை நாட்டரசரும் வந்தார். அந்நான்கு அரசருங் கூடியிருந்த அவையில், அங்கிருந்த ஒரு புலவர், ஒளவையாராற் பாடப்பெற்ற.

''வேழ முடைத்து மலைநாடு, மேதக்க
சோழவள நாடு சோறுடைத்து, - பூழியர் கோன்
தென்னாடு முத்துடைத்து, தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து.

என்னும் வெண்பாவைப் பாடினார். கேட்ட மூவேந்தரும் 'எங்கள் நாட்டிற் சான்றோரில்லையா?

'' தொண்டைநன்னாடு சான்றோருடைத்து '' எனச் சொல்லியது என்னை? என்று சிறிது நாணமுற்று தொண்டைநாட்டரசரை நோக்கி '' உமது நாட்டில் சான்றோருளர் '' என்பதைக் கண் கூடாகக் காட்டக் கூடுமா? எனக் கேட்டனர். அதைக்கேட்ட தொண்டைநாட்டரசர் '' சான்றோரிருத்தலைத் தக்க வழிகொண்டு நீவிர் அறிதலே தகுதியாகும்'' என்றார்.

அதன்பின் நூலறிவின் மூலமே ஒருவரைச் சான்றோர், எனத் துணியலாம் என யாவரும் ஒத்துக் கொண்டு பூமியிற் பெரியது யாது? கடலிற் பெரியது யாது? மலையிற் பெரியது யாது? என மூன்று வினாவையும் எழுதி இதற்கு யார் தக்கவிடை கூறுகிறாரோ அவரே சான்றோராவார் என, எழுதி, அவ்விடமெல்லாம் பரப்பினர் மூன்று வினாக்களுக்கும் யாரும் விடையெழுதாராகச் சேக்கிழார் சுவாமிகளே, திருக்குறளில் மூன்று குறள் மூலம் விடை பகர்ந்தாராக, அவரே சான்றோர் எனப்பட்டுத் தொண்டை நாட்டுக்குச் சிறப்புயரச் செய்தாரென்பர். அவை.

1 பூமியிற் பெரியது யாது?
காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும், ஞாலத்தின் மாணப் பெரிது.

2 கடலிற் பெரியது யாது?

★ பலவீனர்கள் மற்றவர்களைத் தூற்றுவார்கள். ★

பயன்றூக்கார் செய்த உதவி நயன் தூக்கின் நன்மை கடலிற் பெரிது.

3 மலையிற் பெரியது யாது?
நிலையிற் பிரியா தடங்கியான் தோற்றம் மலையினும் மாணம் பெரிது.

கம்பரும் - மண்ணின் கடலின், மலையிற் பெரியதென எண்ணி யெழுதிக் கொடுத்த வேற்புடைத்து என்பர் படிக்காசுப் புலவரும்.

"அஞ்சொல் முதுதமிழ் நால்வேந்தர் வைகு மவையிலவ்வை
செஞ்சொற் புனைகின்ற வேளாளர் வைகுஞ் சிறப்புடைத்தால்
விஞ்சிய வேழமுடைத்தெனும் பாடல் விளம்பிப்பினும்
வஞ்சி வெளிய வெனும்பா மொழிதொண்டை மண்டலமே" என்பர்

சேக்கிழார் சுவாமிகளின் சிவத்தொண்டை மெச்சிய சந்தானாசாரியருள் ஒருவராகிய உமாபதி சிவாச்சாரியார் 104 விருத்தப்பாக்களால் அவரைப் பாடிப்பரவியுள்ளார். உள்ளன் போடு பெரிய புராணத்தை ஓதிவரின், அது இப்பிறப்பிற் செம்மையான வாழ்வைத் தந்து மறுபிறப்பிலும் சிவபிரான் திருவடிசேர வாய்ப்பளிக்கும் என்பது நாவலர் பெருமானும் அவரைப் பின்பற்றி வாழ்ந்த சான்றோர்களதும் சிவானுபவமும் ஆகும். அவ்வண்ணம் நாங்களும் முயல்வோமாக.

---

★ அறிமுகம் என்ற தொடருக்கு மெய்யான பொருள்தான் என்னவாக இருக்கமுடியும்? முகத்துக்குமுகம் அடையாளம் தெரிந்து அறிந்து கொள்வது மட்டும் அறிமுகமில்லை. மனத்துக்கு மனம் அடையாளம் தெரிந்து அறிந்து கொள்வது தான் அறிமுகம்.

★ சொல்லாக வெளிவந்து விடுகிற புகழ்ச்சியைவிட ஒருவருடைய மனத்தில் நிலைத்த மதிப்பீடாகத் தங்கிச் சொல்லாக வெளிப்படாத புகழ்ச்சி மிகவும் தரமானது.

★ எப்போது பார்த்தாலும் பிறருக்கு உபதேசம் செய்து கொண்டே திரியவேண்டும் என்ற துடிதுடிப்பு எவர்களிடம் குறைவாயிருக்கிறதோ அவர்கள் தான் உண்மையில் உபதேசம் செய்வதற்கே யோக்கியதை உள்ளவர்கள்.

★ பிறர் உனக்கு உதவியதை மறக்காதே. ★

# ஔவையார் அருளிய ஆத்திசூடி

## ( உரையும் விளக்கமும் )

**புகழ்ந்தாரைப் போற்றிவாழ்**

புகழ்ந்தாரை (உலகத்தில்) புகழ் பெற்று வாழ்ந்தவர்களை போற்றி - வணங்கி, வாழ் - நீ வாழு,

ஒருவன் உன்னைப் புகழும்போது. அதன் காரண காரியங்களை ஆராயாமல் அவனைக் காப்பாற்ற வேண்டும். புகழ்பெற்றவர்கள் காட்டிய நல்வழியில் வாழ்வாயாக. (80)

**பூமி திருத்தியுண்**

பூமி - உன் விளை நிலத்தை, திருத்தி - சீர்திருத்திப் பயிர்செய்து, உண் - நீ உண்ணு.

உன் விளைநிலத்தைச் சீர்திருத்திப் பயிர்செய்து உண்டு வாழ்ந்திடு என்கிறார் ஔவையார். (81)

**பெரியாரைத் துணைக்கொள்**

பெரியாரை - (அறிவிலே சிறந்த) பெரியோரை, துணைக்கொள்- உனக்குத் துணையாகப் பேணிக்கொள்

அறிவிலும் வயதிலும் முதிர்ந்த பெரியவர்களின் துணையை, அறிவுரைகளை விரும்பிப் பெறுவாயாக. (82)

**பேதமை யகற்று**

பேதமை - (பிறவிக்குக் காரணமாகிய) அஞ்ஞானத்தை அகற்று- (நீ மெய்ஞ்ஞானத்தினாலே) போக்கு.

நம் அறியாமை முழுதும் அறவே நீங்கச் சிறந்த நூல்களைத் தொடர்ந்து படித்துக்கொண்டிருக்க வேண்டும். [83]

**பையலோ டிணங்கேல்**

பையலோடு - சிறுபிள்ளையோடு, இணங்கேல் - நீ கூடாதே.

சிறுபிள்ளைத்தனம் உடையவர்களோடு சேருவீர்களானால் உங்கள் காரியம் பாழாகும். ஆதலால் அறிவற்ற சிறியவரோடு சேர வேண்டாம். (84)

★ அச்சம் இருக்கும் வரையில் நீ அறிவாளியாக மாட்டாய் ★

பொருடனைப் போற்றிவாழ்

பொருள் தனை - திரவியத்தை, போற்றி - [ மேன்மேலும் உயரும்படி காத்து ] வாழ் - நீ வாழு.

உன்னிடம் செல்வம் நிறைய இருந்தாலும் குறைவாக இருந்தாலும் அதைப்பாதுகாத்து மேன்மேலும் வளரும்படி செய்து வாழ்வாயாக. (85)

போர்த்தொழில் புரியேல்

போர் - சண்டையாகிய, தொழில்-தொழிலை, புரியேல்-நீ செய்யாதே.

மற்றவர்களோடு சண்டை சச்சரவுகளைச் செய்யாதே என்கிறார் ஔவையார். (86)

மனந்தடு மாறேல்

மனம் - உள்ளம், தடுமாறேல் - [ யாதொரு விஷயத்திலும் கலங்காதே]

உன் சிந்தனையும் செயலும் உறுதி படைத்ததாகத் திகழவேண்டும். (87)

மாற்றானுக் கிடங்கொடேல்

மாற்றானுக்கு - பகைவனுக்கு, இடம் கொடேல் - [ உன்னை நெருங்கிப் பின் வருந்தும் படியாக நீ ) இடங்கொடாதே.

உங்கள் பகைவனுக்கு இடம் தராதீர்கள். [88]

மிகைப்படச் சொல்லேல்

மிகைப்பட - (சொற்கள் சுருங்காமல்) அதிகப்படும்படி, சொல்லேல் - நீ சொல்லாதே.

நீங்கள் எதைப்பற்றிப் பேசினாலும் அளவோடு பேசுங்கள். மிகுதியாகப் பேசாதீர்கள். (89)

மீதூண் விரும்பேல்

மீது ஊண் - அதிக போசனத்துக்கு, விரும்பேல் - நீ ஆசைப்படாதே.

பேச்சை அளந்து பேசுவது எப்படி அவசியமோ அது போன்று உணவையும் அளவோடு உண்ணவேண்டும். (90)

★ பேராசை என்பது ஒரு பெரிய அரக்கி. ★

உ

# வேண்ட முழுதும் தருவோய் நீ!

அ. மு. பரமசிவானந்தம் (சென்னை)

உலகில் வாழும் உயிர்கள் ஒன்றினை ஒன்று பற்றுக்கோடாகக் கொண்டே வாழ்கின்றன. அவற்றின் வாழ்க்கை முறைகளும் வரலாற்று நெறிகளும் அறிஞர்களால் ஆராயப்பெற்று வருகின்றன. அறிவியல் ஆய்வின்வழி உயிரணுவைப் பற்றிக் காண நினைக்கும் கருத்துக்கு எல்லை காண முடிவதில்லை. உயிரின் தோற்ற ஒடுக்கமும் வாழ்க்கை நெறிமுறைகளும் பிறவும் வரையறுத்துக் காட்ட முடியா நிலையில் உள்ளன. எனினும் இவ் உயிர் தனக்கு உற்ற ஆதாரமாக இவ்வுலகையும் அதில் வாழும் வாழ்வையும் எண்ணும் போது, இவ்வுலகுக்கும் தனக்கும் அப்பாற்பட்ட ஒன்று இருக்கிறது என்று எண்ணும் நிலை நெடுங்காலமாகவே உலகில் இருந்து வருகின்றது.

உலகில் நம்மிடை இணைந்தும் தோன்றாத் துணையாய் நின்றும் அதே வேளையில் அப்பாலுக்கப்பாலாய் அடிசார்ந்தும் நிற்கும் ஒரு பொருளையே கடவுள் எனக் கொண்டாடுகின்றோம். தெய்வ நம்பிக்கையற்ற நாத்திகவாதிகளும் கூடமறைசக்திக்கு அப்பாற்பட்ட ஒன்று உள்ளது எனஏற்றுக்கொண்டு அதற்கு இயற்கை என்று பெயரிடுகின்றனர். எவ்வாறாயினும் உயிரினத்தின் உச்சியிலே உள்ள எல்லாம் வல்லவனாகத்தன்னை எண்ணிக் கொண்டிருக்கும் மனிதனுக்கும் மேம்பட்ட சக்தி ஒன்று உண்டு என்பதை யாரும் மறுக்கவில்லை; மறுக்கவும் முடியாது. அந்த ஆற்றல் மிகுந்த தெய்வத்தைத்தான் சைவன் சிவன் என்கிறான். பிற சமயத்தவர் தாம்தாம் விரும்பிய பெயர் கொண்டு அழைக்கின்றனர்.

இறைவனாம் இவனை நேரிற் கண்டு தம்மை மறந்த அடியவர் பலர்; அவருள் தலையாயவர் மாணிக்கவாசகர் அவர் பாடிய பாடல்கள் ''திருவாசகம்'' என்றே அழைக்கப்பெறுகின்றன அப்பாடல்களுள் ஒன்றன் அடியே தற்போது நம்முன் நிற்கின்றது. உண்மையடியவர் தம்மை மறந்து அவனடியில் ஒன்றி விடுவார்களா

யின் பின் அவர்கள் எதையும் எண்ணாது, அவனடியிற் குழைந்து அவன் எண்ணத்திற் றிளைத்து நிற்பர். அப்போது அவனிடம் எதை வேண்டுவது? என்ன வேண்டுவது!

இன்றைய உலகில் வாழும் மனிதன் இறைவனிடம் என்னென்ன வேண்டுதல்களையோ? செய்கின்றான். தனது கொடுமைகளுக்குங்கூட அவனருள் வேண்டுமென்பது அம்மனிதனுடைய ஆசை. எனினும் அக்கொடுமையும் நலம் பயப்பதாயின் ஒருவேளை இறைவன் அவனுக்கு அருள்புரியக்கூடும். இறை பணிக்கும் அவன் அருள் நாட்டவிழைவுக்கும் தம்மை அர்ப்பணித்த அன்பர்கள் தம்மை மறந்தாற்றும் கொடுஞ்செயல்கள் நன்றாக மாறிய நிலையை நாட்டின் சமய வரலாறுகள் மூலம் கண்டிருக்கும் நமக்கு, இன்றைய கொடுமையாளர் தம் வேண்டுகோள்களும் காதில் வீழ்வது தெரிகின்றது. இவர்தம் கொடுமைகள் தத்தம் வாழ்வை வளம்படுத்தவே அமைய, நல்லார்தம் நன்மைகள் தமக்கு மட்டுமன்றித் தரணிக்கே நன்மை பயப்பதறிவோம்.

இறைவனைத் தொழும் அடியவர்கள் எதையுமே தாம் வேண்டலாகாது என்பதே மெய்ச்சமய நெறி எல்லாச்சமயங்களும் இந்த உண்மையை நன்கு வற்புறுத்துகின்றன. ஆண்டவன் அருள் நலம் பெற்ற அப்பர்,

" **தன்கடன் அடியே னையும் தாங்குதல்**
**என்கடன் பணி செய்து கிடப்பதே** " எனப்பாடுகின்றார்.

ஆம்! இறைவன் தம் குழந்தைகளாகிய உயிர்களுக்குத் தேவையான பொருள்கள் எவையெவை என அறியமாட்டானா? அப்படியாயின் யாண்டும் நீக்கமற நிறைந்து யாவையும் உற்று உணரும் அவன் முடிவிலாற்றலுடைமைக்கு இழுக்கல்லவா! இறைவன் நலம் போற்றும் அடியவர் பலர் இந்த அடிப்படை உண்மையை மறந்து விட்ட காரணத்தினாலேயே எதை எதையோ இறைவனிடம்வேண்டுகின்றனர் அனைத்துயிர்க்கும் அம்மைஅப்பனாகிய இறைவன் இவ்வுயிர்கள் வேண்டாமலேயே தேவையறிந்து வேளை அறிந்து வேண்டுவன தருவான் என்ற உண்மையினையே மணிவாசகப்பெருமான்

" **பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து** "

★ தூய மனதிற்கு இறைவன் புலப்படுகிறான். ★

என விளக்கிக் காட்டியுள்ளார். பெற்ற தாய் தன் குழந்தையின் பசியறிந்து, வேளையறிந்து, அது வாய் திறந்து கேளாமுன்னமே தானே பாலூட்டிப் பாராட்டவில்லையா! இந்தப் பிறவியில் வந்த உலக அன்னைக்கே இத்தகைய பரிவும் பாசமும் இருக்குமானால், என்றென்றும் அன்னையாய், அத்தனாய், அனைத்துமாய் உள்ள ஆண்டவன் தன் குழந்தைகளாகிய உயிர்களின் பிழையறிந்து, வேளையறிந்து, தேவையறிந்து உதவாது விட்டுவிடுவானோ! விடானன்றே! இந்த அடிப்படையிலே தான் மணிவாசகர்,

"வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ" எனப் பாடுகிறார்.

எங்குமாய் யாவுமாய் நிற்கும் நீக்கமற நிறையும் இறைவன் முன் நாம் எம்மாத்திரம். குழந்தைகள் - அறியாக்குழந்தைகள் போன்று நாம் அவன் ஆட்ட ஆடுகின்றோம். ஒரு குழந்தையின் விருப்பையெல்லாம் தாய் நிறைவேற்றி வைப்பாளோ? மாட்டாள். ஒன்றுமறியாக்குழந்தைக்குப் படமெடுத்து ஆடும் பைந்நாகம் அழகிய பொருளாகக் காட்சி தரும்; அதைப்பிடிக்க அவாவும். அன்னையிடம் அதைப் பிடித்துத் தருமாறு கேட்கும். ஆனால் தாய் அதைச் செய்வாளோ? பாம்பொடு குழந்தையை விடின் என்னாகும் என அவள் அறிவாள். எனவே பாம்பைக் கொன்றுவிடவும் ஏற்பாடு செய்யக்கூடும். அச்செயல் கண்டு குழந்தை அன்னையை வெறுக்கும்; தனக்கு வேண்டியதைத்தர வில்லை என்று வருந்தும். ஆயினும் அக்குழந்தையே வளர்ந்த பிறகு அப்பைந்நாகத்தின் இயல் பறியும் பொழுது அன்னையின் செயலுக்கு விளக்கம் அறிந்து அவள் செய்தது சரியே என்று அவள் பாசத்தைப் போற்றும். இதே நிலையில் தான் நாம் நிற்கின்றோம். எதை எதையோ இறைவனிடம் கேட்கிறோம்; அந்த வேளையில் அப்பொருள் அழகாகவும் அவசியமாகவும் நமக்குப்படுகிறது. அவை அனைத்தையும் இறைவன் நமக்குத் தருவானா? தராவிட்டால் அவனைப் பலவகையிற் பழிக்கின்றோம்; அவன் இல்லவே இல்லை என்று கூடச் சொல்லத் துணிகின்றோம். அவ்வாறு நாம் சொல்லுவதால் அவன் இல்லையாகி விடப்போவது இல்லை. ஆனால் அதே வேளையில் அவன் நமக்குத் தேவை எதுவோ அதை நாம் வேண்டினும் வேண்டா

★ அன்பில்லாத உள்ளம் ஒரு பாழ் வீடு. ★

விடினும் தந்தே உதவுவான். உண்மை இவ்வாறாக மணிவாசகர் "வேண்ட முழுதும் தருவோய் நீ" என்கிறாரே - இது எவ்வாறு பொருந்தும் என்ற ஐயம் எழுதல் இயல்பே!

நல்லவர் வேண்டுவன அனைத்தும் நலம் பயப்பனவாக வன்றோ இருக்கும். மணிவாசகர் "உற்றாரை வேண்டாது-ஊர் வேண்டாது - பேரும் வேண்டது" வாழ்ந்தவரன்றோ! அவர் வேண்டுதலால் யாருக்குத் தீமை உண்டாகும்? "நாடெங்கும் வாழக்கேடொன்றுமில்லை" என்பதன்றோ அவர்தம் உள்ள விழைவு.

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

எனத் தாயுமானவர் இதன் பொருட்டல்லவோ பாட்டிசைத்தார். எனவே இவர்கள் விழைவை - வேண்டுதலை இறைவன் ஏற்றுக் கொள்ளாது மறுப்பானோ? இந்த அடிப்படையிலே தான் மணிவாசகர் "வேண்ட முழுதும் தருவோய் நீ" எனக் கூறினார்.

இந்த அடிக்கு முன்னுள்ள அடி இதற்கு விளக்கம் தருவதாக அமைகின்றது. "வேண்டத்தக்க தறிவோய் நீ" என்பதே அது. ஆம்! மெய்யடியவர் எதை வேண்டுதல் செய்தல் வேண்டும் என்பதை இறைவன் அறிவார். மற்றவர் வேட்கையினையும் இறைவன் அறிவனன்றோ! ஆம் - அறிவான். ஆயினும் அப்புறவுயிர்கள் தம்மை மறந்து தலைவனை நாடாமையினாலேபாவத்திற்பட்டுழலவேண்டிய நிமித்தம் எதை எதையோ, வேண்டுவதை எண்ணி நகைத்துத் தேவையறிந்து உதவியும் அன்றேல் நிறுத்தும்அறக்கருணையாலும் மறக்கருணையாலும் அவ்வுயிர்களை ஆட்கொள்ளுகின்றான். ஆனால் முற்றிய பக்குவப்பட்ட உயிர்களின் வேட்கையினையும் அவை வேண்டத்தக்கவை இவை என்பதையும் இறைவன் நன்குணர்ந்து வகைப்படுத்துகிறான். அவர்கள் "தமக்கென வாழாப் பிறர்குரியாளர்கள் ஆனமையின் அவர்கள் வேண்டுதல் எதுவும் மாறுபட்டதாகவோ அறத்தினும் வேறுபட்டதாகவோ வையகவாழ்வுக்கு ஊறுதேடுவதாகவோ அமையாது. ஆனால் அதற்கு மாறாக "வையகமும் துயர் தீர்க்கவே" என்ற உள்ள விழைவில் நாடெங்கும் வாழும் நல்விழைவாகவே அந்நல்லவர் வேண்டுதல் அமைந்

★ நான், எனது என்ற எண்ணமே பந்தமாகும். ★

திருக்கும். எனவே இறைவன் அவர் வேண்டிய அனைத்தையும் முழுவதுமாகத் தருகிறான். அதனால் தான் மணிவாசகர் வாய் "வேண்ட முழுதும் தருவோய் நீ" எனப்பாடுகின்றது.

மணிவாசகரைப் பாடிப் பரவும் நாம் அவரைப் போன்று வையத்து வாழ்வை நம் வாழ்வாக எண்ணி, எல்லாம் அவன் செயல் என உணர்ந்து "நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே" என்று நம்மை முற்றும் அவனுக்கு ஒப்படைத்து விட்டால், நமக்கும் இறைவன் வேண்ட முழுவதும் தருவான். உலகில் வாழும் உயிர்கள் - சிறப்பாக மனிதர்கள் இந்த அடிப்படை உண்மையை உணர்ந்து "எல்லாம் அவன் செயலே" என்ற நெறியில், 'நான் எனது என்னும் செருக்க' கற்றவராய்ச் செம்மை உள்ளத்தோடு அறநெறிபற்றி, அவன் தாள் போற்றும் தூய பண்பில் தலை நின்றால் அவர்தம் உள்ளம் சிறக்கும். அவர்தாம் வேட்கை வையத்து வாழ்வாகவே இருக்கும். அப்பொழுது அந்த ஆண்டவன் "வேண்ட முழுவதும் தருவான்" நாமும் மனிதர்கள் தாமே; ஏன் நாம் முயலக் கூடாது? அது முடியாத வாழ்வன்றே! "எல்லாரும் இன்புற்றிருக்க நினைக்கும்" எண்ணம் நல்லது தானே. ஆம்! நல்லது தானே! ஆகவே முயல்வோமாக! சேரவாரும் செகத்தீரே!

## சந்நிதியான் புகழ் பாடிடுவோம்

சந்நிதியான் புகழ் பாடிடுவோம் - என்றும்
சந்நிதியில் வந்து கூடிடுவோம் சந்நிதியான்

வள்ளி தெய்வானையுடன் வலம் வரும் வேலவனே
புள்ளி மயிலேறி துள்ளியோடி வந்திடுவாய்
கள்ளமற்ற மனதில் எந்நாளும் வீற்றிருப்பாய்
மெள்ளத் தவழ்ந்து வந்தே வேதனை தீர்த்திடுவாய் — சந்நிதியான்

வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டாலே
நாதியற்ற நமக்கு நன்மைகள் கூடிவரும்
ஓதியுணர்ந்து நாளும் ஒருமனதாய் வழிபட்டால்
நீதியுடனோடி வந்து நிம்மதியைத்தான் தருவாய் — சந்நிதியான்

இராசையா ஸ்ரீதரன்

★ எதையும் சொல்வதை விடச் செய்வதே மேல். ★

[ தொடர்ச்சி...

உ

# 17 - 02 - 2002 இல் இருந்து நித்திய அன்னப்பணிக்கு உதவி புரிந்தோர் விபரம்

| | |
|---|---|
| வெங்கடேஸ்வரா உதிரிப்பாக விற்பனை நிலையம் கஸ்தூரியார் வீதி | 2 மூடை அரிசி |
| வேணிகளஞ்சியம் சத்திரத்துச் சந்தி யாழ் | 3 மூடை அரிசி |
| ஓசன் ரேடஸ் ஸ்ரான்லி வீதி யாழ் | 10000 00 |
| குகன் ஸ்ரோர்ஸ் ஆஸ்பத்திரி வீதி யாழ் | 3 மூடை அரிசி |
| குபேரன் களஞ்சியம் ஆஸ்பத்திரி வீதி யாழ் | 1 மூடை அரிசி |
| க. கு. கந்தையாபிள்ளை அன்சன்ஸ் யாழ் | 2 மூடை அரிசி |
| இ. முத்துலிங்கம் செட்டியார் ஆஸ்பத்திரி வீதி யாழ் | 1 மூடை அரிசி<br>200 தேங்காய் |
| விஜிதா ரெக்ஸ் பெரியகடை யாழ் | 2 மூடை அரிசி |
| திருமதி சி. தர்மலிங்கம் இமையாணன் உடுப்பிட்டி | 1000 00 |
| ஸ்ரீ. பார்த்தசாரதி ஸ்ரோர்ஸ் கஸ்தூரியார் வீதி | 1 மூடை அரிசி |
| மகாராணி புடவையகம் பெரியகடை யாழ் | 1 மூடை அரிசி |
| வைரமாளிகை கன்னாதிட்டி யாழ் | 5 மூடை அரிசி |
| த. விக்னேஸ்வரன் தங்கராசா நகை மாளிகை கன்னாதிட்டி | 2000 |
| A. S. S. இராமச்சந்திரன் மாலி சந்தி அல்வாய் | 2010 |
| K. வையித்திலிங்கம் அன்சன்ஸ் ஸ்ரான்லி வீதி யாழ் | 1 மூடை அரிசி |
| அம்பிகாபதி பான்ஸ்கூட் பெரியகடை யாழ் | 1 மூடை அரிசி |
| பெற்றா ஏசென்ஸ் ஆஸ்பத்திரி வீதி யாழ் | 3 மூடை அரிசி |
| தர்மிளா படிகலிங்கம் யோகுரேடிங் ஆஸ்பத்திரி வீதி | 2 மூடை அரிசி |
| Dr. பாக்கியநாதன் திருநெல்வேலி | 5000 00 |
| சிவா. பிறதேஸ் திருநெல்வேலி | 1 மூடை அரிசி |
| K. தவரூபன் திருநெல்வேலி | 1 மூடை அரிசி |
| கிருஸ்ணா பீடாக்கடை வண்ணார்பண்ணை | 1 மூடை அரிசி |
| சுதா கோண்டாவில் | 1 மூடை அரிசி |
| B. R. றஞ்சன் B. A. தம்பிலேன் வண்ணார்பண்ணை | 1 மூடை அரிசி |
| அச்சுவேலி ப. நோ. கூ. சங்கம் | 1 மூடை அரிசி |
| லோ. கெங்காதரன் பிரதேச செயலகம் சண்டிலிப்பாய் | 1000 00 |
| லோ. வித்தியா, ப. நோ. கூ. சங்கம் நல்லூர் | 1000 00 |
| N. சாந்தலிங்கம் கொக்குவில் மேற்கு | 2000 00 |
| மதிவண்ணன் வனஜா கனடா | 1 மூடை அரிசி |

★ முயற்சி கையிலிருந்தால் முடியாதென்பதே இல்லை. ★

| | |
|---|---|
| செல்வி தி. பெரியதம்பி மூலம் புவனேஸ்வரி பெரியதம்பி பருத்தித்துறை | 4000 00 |
| ஸ்ரீ. றங்கன் அச்சுவேலி | 1500 00 |
| தம்பிரத்தினம் தயாபரன் ஜெர்மனி | 5000 00 |
| நா. பரமானந்தமூர்த்தி கனடா | 210 க. டோ டெலர் |
| சந்திரன் கடை உரும்பராய் | 1 மூடை அரிசி |
| இராமச்சந்திரன் இணுவில் | ½ மூடை அரிசி |
| கொ. க. ஆ. க. யாழ் | ½ மூடை அரிசி |
| மா. தங்கவேல் போடிங் றோட் பருத்தித்துறை | 1 மூடை அரிசி |
| | 3000 00 |
| சி. ஸ்ரீதரன் கரவெட்டி கனடா | 1000 00 |
| மோகனதாஸ் பிரிந்தா பிரான்ஸ் | 2500 00 |
| யோகரெத்தினம் C. T. B. அச்சுவேலி | 2500 00 |
| நாகம்மா தாண்டிக்குளம் வவுனியா | 500 00 |
| தி. முரளிதரன் கனடா | 3000 00 |
| தங்கம்மா இரத்தினம் மிதிலை கரவெட்டி | 1000 00 |
| சி. வல்லிபுரம் தும்பளை பருத்தித்துறை | 1000 00 |
| ச. தாமோதரம்பிள்ளை பழமுதிர்சோலை கரணவாய் தெ. | 1000 00 |
| பொ. பரஞ்சோதி வத்தனை புலோலி | 2000 00 |
| ஸ்ரீநதியா நகைமாடம் யாழ் | 4000 00 |
| க. ஆதவகிருஸ்ணன் கரணவாய் தெற்கு | 1000 00 |
| மு. தவரூபராசா வறணி | 1000 00 |
| திருமதி. கிருசாந்தி ஜெயராஜன் நாச்சிமார் கோவிலடி | 2000 ... |
| T. மகாலிங்கம் நாச்சிமார் கோவிலடி யாழ். | 1000 ... |
| கண்ணன் கபே பரமேஸ்வரா சந்தி யாழ். | 1000 ... |
| Dr. K. சிவஞானசூரியர் கொழும்பு | 4000 |
| து. சுந்தரதாஸ் குடும்பம் (வண்ணம்) லண்டன் | 10000 ... |
| ம. ஸ்ரீதரன் வல்வை லண்டன் | 25000 ... |
| க. இரத்தினம் G. S. கரணவாய் தெற்கு | 1000 ... |
| து. சிவஞானச்செல்வம் புளியங்கூடல் ஊர்காவற்துறை | 1000 ... |
| | 2. மூடை. அரிசி. தேங்காய் |
| சுப்பிரமணியம் சோமசுந்தரம் புளியங்கூடல் | 500 ... |
| க. நல்லசேகரம் புளியங்கூடல் | 500 ... |
| சாந்தி புடவையகம் யாழ். | 1 மூடை அரிசி |
| நா. குகன் குகன் ஸ்ரூடியோ பருத்தித்துறை | 1000 |
| ஆனந்தி சிவஞானசுந்தரம் அதிபர் இராமநாதன் கல்லூரி | 1000 ... |
| க. செந்தூரன் நவாலி | 1500 ... |

✶ உண்மையான அழகு இதயத்தூய்மையிலே உள்ளது. ✶

| | |
|---|---|
| ந. குலசேகரம் வருணன் அச்சுவேலி 1 மூடை அரிசி | 1000 ... |
| A. பாஸ்கரன் வல்வெட்டித்துறை லண்டன் | 2000 ... |
| திருமதி ம. நாகேஸ்வரி நவிண்டில் | 2000 ... |
| த. ந. பஞ்சாட்சரம் ஆசிரியர் நீர்வேலி | 1010 ... |
| நவரெட்ணஜோதி விகர்ணகரன் / ,, ,, குமரன் } கொழும்பு தெகிவளை | 2000 ... |
| க. தியாகராசா இளைப்பாறிய தபாலதிபர் திருமலை | 1000 ... |
| ந. ஜெயரெட்ணராஜா உபதபாலதிபர் மாதகல் | 1 மூடை அரிசி |
| அம்பிகை களஞ்சியம் ஆஸ்பத்திரி வீதி யாழ் | 2 மூடை அரிசி |
| சிவப்பிரகாசம் வர்த்தக நிலையம் ஆஸ்பத்திரி வீதி | 1 மூடை அரிசி |
| T. தியாகலிங்கம் S. V. M. ஆஸ்பத்திரி வீதி யாழ் | 1 மூடை அரிசி |
| பரமலிங்கம் கடை யாழ் | 1 மூடை அரிசி |
| கு. நவரெத்தினராசா மூலம் கண்டி | |
| சுதர்சினி பாலச்சந்திரன் மலர் வசந்தம் வியாபாரிமூலை | 2000 ... |
| T. பாலசுப்பிரமணியம் மூலம் இன்பமலர். நேசமலர் கனடா | 5000 ... |
| மோகன் ஆவரங்கால் | 1150 ... |
| K. V. சிவநேசன் கொக்குவில் | 1000 ... |
| மு. கதிர்வேல் சுழிபுரம் | 2000 ... |
| இ. லோகேந்திரன் குடும்பம் வதிரி | 2000 ... |
| நடராஜா தெய்வேந்திரன் லண்டன் | 2000 ... |
| பகீரதி கணேஸ் கந்தரோடை | 1500 ... |
| இ. இரட்ணசோதி மயிலிட்டி | 1000 ... |
| S. மிகுந்தலா கட்டைவேலி கரவெட்டி | 1000 ... |
| க. செல்வராஜா இளைப்பாறிய ஆசிரியர் கட்டைவேலி | 3000 ... |
| விதுசன் அல்வாய் கிழக்கு அல்வாய் | 2000 ... |
| இ. விக்னேஸ்வரமூர்த்தி நிர்வாக உத்தியோகத்தர் பரு. | 1000 ... |
| சு. வன்னியசிங்கம் நவிண்டில் | 1000 ... |
| திருமதி த. சிவலிங்கம் கலட்டி வண்ணார்பண்ணை | 1000 ... |
| வ சின்னப்பு நாவலடி உடுப்பிட்டி | 1 மூடை அரிசி |
| மோகனகுமார் பிரகாஷ் U.K | 1000 ... |
| கணேஸ்ராஜ் நிஷாந்தி கொழும்பு | 1000 ... |
| ஆச்சி நெல்லியடி | 400 ... |
| ஆ. குணசேகரம் சங்கானை | 3000 ... |
| சோ. செல்வந்தன் நெடியகாடு வல்வை | 3000 ... |
| இந்திராணி இரட்ணஜோதி இமையாணன் | 1000 ... |
| சுப்ராங் தொலைத்தொடர்பு நிலையம் கதிரிப்பாய் | 2000 ... |

★ எந்த ஒரு உயிருக்கும் துன்பம் செய்யாதே ★

| | |
|---|---|
| க. கணபதிப்பிள்ளை ஆசிரியர் இலக்கியவாசா அல்வாய் | 1000 ... |
| மா. திருச்செல்வம் முருகன் கோவிலடி புலோலி வடமேற்கு | 1000 ... |
| வே. தில்லைநாதன் இலங்கை வங்கி கொழும்பு | 500 ... |
| சேது. சைக்கிள் வேக்ஸ் கஸ்தூரியார் வீதி யாழ் | 1000 ... |
| வே. சுவாமிநாதன் இடைக்காடு | 500 ... |
| வே. துரைசிங்கம் அதிபர் வல்வெட்டி | 1 மூ அரிசி |
| செல்லத்துரை குடும்பம் வல்வெட்டித்துறை | 2 மூ அரிசி 500 ... |
| தே. செல்வமனோகரன் வட்டுக்கோட்டை | 500 |
| க. முத்துநாயகம் வட்டக்கச்சி | 2000 ... |
| Dr. G. உதயசீலன் சுதுமலை | 1000 ... |
| ச. சோபிகா துன்னாலை கிழக்கு கரவெட்டி | 1000 ... |
| இ. ஸ்ரீஸ்கந்தராசா உடுப்பிட்டி | 2000 ... |
| அ. தில்லைநாதன் ஆவரங்கால் | 2000 ... |
| K. நடராசா பத்தமேனி | 1 மூடை அரிசி தேங்காய் |
| சுப்பிரமணியம் பகீர் உரும்பராய் | 2500 ... |
| வேலுப்பிள்ளை வேலாயுதம் கொடிகாமம் | 1000 ... |
| K. சீவரெத்தினம், மகேஸ்வரன் இருபாலை | 3000 ... |
| சி. குமாரசாமி மயிலிட்டி | 1000 ... |
| நடராசா இரத்தினகோபால் பருத்தித்துறை | 1000 ... |
| பப்பன் கடை சிறுப்பிட்டி | 500 ... |
| இ. சுப்பிரமணியம் K. K. S. வீதி யாழ்ப்பாணம் | 3000 ... |
| அ. அசோக் அல்வாய் | 1000 ... |
| ந. இராஜேஸ்வரன் வல்வெட்டி | 1 மூடை அரிசி |
| ஐ. ஆறுமுகம் காரைநகர் | 2000 ... |
| Dr. S. சிவசம்பு தொண்டைமானாறு | 3500 .. |
| N. இராமநாதன் நாயன்மார்கட்டு | 1350 ... |
| S. விஸ்வலிங்கம் சிறுப்பிட்டி மத்தி | 10 மூடை அரிசி |
| செ. இராஜதிலகம் கொழும்பு | 4000 ... |
| நிமலசாந்தன் அச்சுவேலி | 4000 .. |
| வைஷ்ணவி நகைப்பூங்கா நெல்லியடி | 500 |
| சி. ஸ்ரீஆனந்தராசா ( பத்மராசா மூலம் ) நவிண்டில் | 3000 ... |
| இந்திரா கபே நெல்லியடி | 3000 ... |
| ஜெயகருணாகரன் கரணவாய் மத்தி | 1000 ... |
| S. ஜீவறஞ்சன் பிறேமர் ஏசென்ஸ் விநியோகத்தர் கொழு. | 3000 ... |
| க. தர்மலிங்கம் இடைக்காடு | 1000 ... |
| திரு / திருமதி சின்னையா கொழும்பு (தொடரும்... | 4000 ... |

✶ இறைவனின் குணம் கருணை. ★

உ



# மானுடத்தை மேன்மைப்படுத்தும்
# மாண்புமிகு கோட்பாடுகள்
## ( மகாபாரதத்திலிருந்து )
# பதினோராம் நாட்போர்

சிவத்திரு வ. குமாரசாமிஐயர்

துரோணாச்சாரியார் தலைமையின் கீழ் கௌரவ சேனைகள் மிக்க உற்சாகத்துடன் போரிடமுனைந்தன. பாண்டவசேனைகள் தருமரைப் பிடித்துவிடும் நோக்கில் துரோணர் முயன்றிருப்பதனை அறிந்து வெகு ஜாக்கிரதையுடனும் வீரத்துடனும் போர் புரிந்தன. பதினோராம்நாட்போர் வெகுதீவிரமாக ஆரம்பமாயிற்று. துரோணர் யுதிஷ்டிரரைத் தேடிச் சென்று அவரது படையணிமீது தாக்குதலை மிகக் கடுமையாக நடாத்தினார். திட்டத்துய்மன் துரோணரின் படைகளை மிக வேகமாகத் தாக்கினான். மறுபுறம் அர்ச்சுனன் புதல்வன் அபிமன்யு தீவிர யுத்தம் புரிந்தான். அபிமன்யுவின் தாக்குதலால் கௌரவசேனை திணறியது. இதனைக் கவனித்த சல்லியன் கடுமையாகத் தாக்க முற்பட அதனைக் கவனித்த பீமன் தனது கதாயுதத்தைக் கரத்தில் தாங்கிச் சல்லியனைத் தீவிரமாகத்தாக்கினான். முதியவனான சல்லியனால் பீமனுடன் எதிர் நிற்க முடியாத நிலையில் மூர்ச்சையானான்.

சல்லியனைக் கிருதவர்மா அப்பாற் கூட்டிச் சென்று முதலுதவிகள் செய்யமுற்பட்டான். மாபெரும் வீரனான சல்லியன் மயங்கியமையால் கௌரவ சேனை நிலைகுலைந்தது இதனைக் கவனித்த துரோணர் படைகளை ஊக்கப்படுத்தி மீண்டும் யுதிஷ்டிரரை நோக்கிச் சென்று யுத்தம் புரியலானார். துரோணர் யுதிஷ்டிரரைக் குறிவைத்துத் தாக்குவதனைக் கண்ட பாஞ்சால நாட்டுப் படையணிகள் துரோணரை எதிர்த்துக் கடும் போர் புரிந்தன. பாஞ்சாலர்களையும் திட்டத்துய்மனையும் விவேகமாக எதிர்த்த துரோணர் தருமர் இருக்குமிடத்தை அணுகினார். இந்நிலையிற் கௌரவசேனை ''தருமன் பிடிபட்டான்'' எனக்கோஷமிட்டன. இக்கோஷம் அர்ச்சுனன்

காதில் வெகுவிரைவில் விழுந்த கணமே அர்ச்சுனன் மிகத்துரித மாக மாய அஸ்திரம் ஒன்றை வானில் ஏவி எங்கும் இருள் பரவச் செய்தான். இதனால் எங்கும் ஒரே இருள். ஒருவரை ஒருவராற் புரிந்து கொள்ளமுடிய வில்லை. கௌரவசேனை அஞ்சி நடுங்கிக் களத்தை விட்டுச் சிதறி யோடலாயிற்று. பாண்டவ சேனை மகிழ்ச்சி ஆரவாரஞ் செய்து பாசறைக்குத் திரும்பியது அர்ச்சுனனின் வீரத்தையும் சமயோசித புத்தியையும் எல்லோ ரும் பாராட்டிப் பாசறைக்கு மீண்டனர்.

தருமரைப் பிடிக்கமுடியாது போய் விட்டதனாற் கவலை யடைந்த துரோணர் துரியோத னுடன் கலந்தாலோசனை செய்தார். துரியோதனனுடன் உரையாடலிற் கலந்து கொண் டிருந்த மன்னர் குழாத்துள் திரி கர்த்த நாட்டு மன்னனும் ஒருவன். அவன் அர்ச்சுனன் மீது நெடுநாட்பகை கொண்டவன். அவன் இச்சந்தர்ப்பத்தைப்பயன் படுத்தி அர்ச்சுனனைத் தான் தனியே அழைத்துப் போர்புரிவ தாகவும் அச்சந்தர்ப்பத்தில் யுதிஷ்டிரர் தனித்திருக்க வாய்ப்பு ஏற்படும், அவ்வேளை தருமரை எளிதிற் பிடித்து விடலாம் என்றும் ஆலோசனை கூறலா னான். இதனால் ஓரளவு தெளி வடைந்தனர் துரியோதனனும் துரோணரும்.

## பன்னிரண்டாம் நாட்போர்

அடுத்தநாட் காலையில்போர் தொடங்கியதும் திரிகர்த்த நாட்டு மன்னன் அர்ச்சுனனை அறைகூவினான் இதனாற்குழப்ப மடைந்த அர்ச்சுனன் தரும ரைத் தனியே விட்டுச் செல்ல முடியாத நிலையிற்றத்தளித் தான். பின்னர் ஒருவாறு தெளி வடைந்தவனாய், மிகவும் பெரும் வீரனும், மிக்க உறவுமுள்ள வனாகிய பாஞ்சாலநாட்டு மன் னன் சத்தியசித்தை யுதிஷ்டிர ரைப் பாதுகாக்கும்படி பணித்து விட்டுத்திரிகர்த்த நாட்டு மன்ன னுடன்யுத்தம் புரியச்சென்றான். திரிகர்த்த நாட்டு மன்னனுடன் அர்ச்சுனன் போரிடத் தொடங் கியதும் துரோணர், யுதிஷ்டிரர் இருக்கும் இடத்தை அணுகி யுதிஷ்டிரருக்குத் துணையாக விருந்த பாஞ்சால நாட்டு வீரர் களைத் தாக்க முயன்றார்.

அர்ச்சுனனை எதிர்த்த திரி கர்த்தநாட்டு மன்னன் பெரும் படைப்பலம் உடையவன். அவ னது படைகளும் மன்னனும் ஒன் றிணைந்து அர்ச்சுனனைக் கடு மையாகத் தாக்கினர். கண்ணன் இலாவகமாகத்தேரோட்டி அர்ச் சுனனைக் காப்பாற்றிய வண் ணம் இருந்தார். அர்ச்சுனனின் தாக்குதல்களை எதிர் கொள்ள முடியாது திரிகர்த்தப் படைகள் சிதறலாயின. இதனாற் கடுஞ் சினம் கொண்ட திரிகர்த்த

நாட்டு மன்னன் வீரத்துடன் கடுமையாக யுத்தம் செய்தான். எனினும் அர்ச்சுனனது வீரத் திற்கு எதிர் நிற்க முடியாது அவ் விடத்தை விட்டகன்றான்.

அர்ச்சுனனது வீரமிக்க போர் முறையால் எங்கும் புழுதிமண் டலம் எழுந்து வானத்தை மறைத்து இருளைத் தோற்று வித்தது. பாண்டவசேனை வெற்றி ஆரவாரஞ் செய்தது. இவ்வேளையிற் துரோணர் மிக்க சாதுரியமாக யுதிஷ்டிரர் இருக் கும் இடத்தை அணுகிப் போரிட முயன்ற போது, திட்டத்துய் மன் யுதிஷ்டிரரைக் காப்பாற்றும் கடப்பாடுடையவனாய் முன் னின்று யுத்தம் புரியலானான். திட்டத்துய்மனுடன் போரிட முடியாத துரோணர் சற்றுப்பின் னடைந்த வேளை திட்டத்துய் மனைத் துரியோதனன் தம்பிய ருள் ஒருவனான துர்முகன் எதிர்த்துப் போரிட்டான். இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய துரோணர் மிகவிரைவாக யுதிஷ் டிரரின் அருகாமையை அணுகி னார். தருமரைப் பாதுகாக்கும் நோக்கம் கொண்ட சத்திய சித்து விரைந்து வந்து துரோ ணரை எதிர்த்தான். துரோண ரின் படைகளைச் சின்னாபின்ன மாக்கி வீராவேசமாகத் தாக்கு தல்களை நடாத்தினான். இத னாற் கடுஞ் சினம் கொண்ட துரோணர் சத்தியசித்தை அழித் துக் கொன்றார். சத்திய சித்து இறந்தமையால் தனியே விடப் பட்ட யுதிஷ்டிரரைப் பாஞ்சால வீரர்கள் மீண்டும் காவல் செய்து துரோணருடன் போரிட்டனர்.

பாஞ்சால வீரர்களின் மூர்க்க மான தாக்குதல்களை எதிர் கொள்ள முடியாத துரோணரும் அவரது படைகளும் திணறித் தத்தளித்தன. இதனைக் கவ னித்துக்கொண்டகன்னன் துரோ ணரைக் காப்பாற்றும் பொருட்டு துரியோதனனையும் அவனது தம்பியர் சிலரையும் அவ்விடத் துக்கு அனுப்பி வைத்தான். பாண்டவசேனை துரோணரைக் கொன்றொழித்து விடும் நோக் குடன் ஆவேசமாகப் போரிட் டது. துரியோதனன் எதிர் கொண்டு வருவதனைக் கண்ட பீமன் அவனுடன் சென்று மோதினான் துரியோதனனைப் பீமன் தாக்குவதனைக் கண்ட பகதத்தன் பீமனுடன் எதிர்த் தான். மிக்கபலம் பொருந்திய வனாகிய பகதத்தனுடன் எதிர் நிற்கமுடியாத பீமன் களைப் படைந்தான். இதனாற் கௌரவ சேனை ஆர்ப்பரித்து முழக்கம் செய்தது. பீமனுக்கு ஏதோ நடந்து விட்டது என்றறிந்த பாண்டவசேனை பெரும் மூர்க் கத்துடன் பீமன் இருக்கும் இடத்தை அணுகிப் போரிட முயன்றது. பகதத்தன் மலை நாட்டு மன்னன். மிகுந்த பலம்

கொண்ட படையணிகளையும் உடையவன். அவனது தாக்குதலாற் பாண்டவசேனை பெரும் அழிவுகளைச் சந்தித்தது இதனைக் கவனித்த அர்ச்சுனன் பீமன் இருக்குமிடத்தை அணுக முயன்றபோது திரிகர்த்தர்கள் அவ்விடத்திற்குச் சென்று உதவ முடியாதநிலைமையை உருவாக்கி அவனைத்தடுக்க முயன்றனர்.

பீமனுக்கு உதவமுடியாது திரிகர்த்தர்கள் பெரும் பாணங்களைத் தொடுத்துப் பெரும் அனர்த்தங்களைச் செய்தனர். இதனாற் கோபமடைந்த அர்ச்சுனன் பிரம்மாஸ்திரத்தைத் தொடுத்து அனைவரையும் அழித்தொழித்தான். இதனால் மகிழ்வுற்ற கண்ணபிரான் அர்ச்சுனனை வெகுவாகப் பாராட்டினார். இதன் பின்னர், பகதத்தன் இருக்குமிடத்தை நோக்கித் தேரினைச் செலுத்தலானார். பகதத்தனுடன் அர்ச்சுனன் கடுமையாகப் போரிட்டும் அவனை அழிக்க முடியாது திணறலானான்.

இதனை உணர்ந்து கொண்ட கண்ணபிரான் அர்ச்சுனனுக்குக் குறிப்பாக உணர்த்த முயன்று, "அர்ச்சுனா இவன் வயதானவன். இவனது கண்களின் மேற்றசைகள் தொங்கி இவனது கண்களை மறைக்கின்றன. அதனை அவன் பட்டுத்துணியினாற் கட்டி இருக்கிறான்'' என்று உணர்த்தலானார். கண்ணபிரானின் கூற்றினை உணர்ந்து கொண்ட அர்ச்சுனன் பகதத்தனது கண்களின் மேற்புறத்திற் கட்டி இருந்த பட்டுத்துணியைப் பாணமொன்றை எய்து அறுத்து வீழ்த்தினான். துணி அகன்றதும் தசைகள் கீழே தொங்கிப் பகதத்தனது கட்பார்வையை மறைத்தது கட்பார்வை இல்லாது தத்தளித்த பகதத்தனை எளிதாக அர்ச்சுனன் வதம் செய்தான் பகதத்தன் வதம் செய்யப்பட்டதை அறிந்த பாண்டவசேனை மகிழ்ச்சி ஆரவாரஞ் செய்தது.

[தொடரும்...

---

★ பொறுமையிலும் உயர்ந்த தவமில்லை திருப்தியிலும் உயர்ந்த இன்பமில்லை மன்னித்தலிலும் பார்க்க ஆற்றல் மிக்க ஆயுதமில்லை.


★ உழைப்பில் ஊக்கமும், உண்மையில் உறுதியும், தொழிலில் திறமையும், தொண்டில் நேர்மையும், சொல்லில் நேர்மையும், துன்பத்தில் சகிப்பும் இருந்தால் வாழ்வில் வளம் சேரும்

★ வார்த்தைகள் இதயத்திலிருந்தே வரவேண்டும் ★

உ

# சந்நிதியான்

- ந.ஆரியரத்தினம் -



ஆலயம் என்பது ஆண்டவனைத் தரிசிப்பதற்கும் ஆத்மீக ஈடேற்றத்திற்குமான ஓர் உன்னதமான இடமாக விளங்கிவருவது வெள்ளிடைமலை. மேலும் ஆலயத்திற்குச் செல்வதால் எமது உள்ளம் அமைதியும், தூய்மையும் பெற்று மனதிற்கு சாந்தியையும், திருப்தியையும் தருவதை இன்னும் பலர் சுட்டிக்காட்டுகின்றனர். இவ்வாறு ஆலயத் தரிசனத்தின்சிறப்பையும், பயனையும் அதன் முக்கியத்துவத்தையும் பல்வேறு கோணங்களில் பலரும் வெளிப்படுத்தி வருவதை நாம் காணமுடிகின்றது.

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தரிசனம் என்பது இவைஎல்லாவற்றையும் விட வித்தியாசமான அனுபவங்

பெருமனம் உள்ளவருக்கு உலகமே குடும்பம்.

களையும் அதேநேரம் மக்கள் வாழ்வியலுடன் தொடர்புபட்டதுமான வாழ்வியல் அம்சங்களையும் கொண்ட ஓர் அற்புதமான சந்நிதிதானமாக விளங்கிவருவது தான் அதனுடைய தனித்துவமும், முக்கியத்துவமுமாகும்.

இந்த தனித்துவமும், முக்கியத்துவமும் வார்த்தைகளால் விபரிக்கமுடியாதவை· விண்ணுலகத்தவருக்குக் ௳கூட கிடைக்க முடியாத. விண்ணுலகத்தவரே வியக்கத்தக்க ஓர் புண்ணிய பூமியாக இந்தஆலயம் விளங்கி வருவதை இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்வுகள் அனைத்தும் எமக்கு வெளிப்படுத்திக்கொண்டே இருக்கிறது.

குறிப்பிட்டுக் கூறுவதானால் மானிட வாழ்க்கையில் ஏற்படக் கூடிய மனக்கவலை, நோய் நொடிகள், துயரங்கள், முதுமையினால் ஏற்படுகின்ற துன்பங்கள் மற்றும் வாழ்க்கைப் பயணத்தில் ஏற்படும் சோதனைகள் வேதனைகள், வறுமையின் தாக்கங்கள், மற்றும் தற்போதையபோர்ச்சூழலால் உளரீதியாகஏற்படும்நெருக்கடிகள் உளவியற் தாக்கங்கள் உறவுகளைப் பிரிந்ததினால் ஏற்படும்பிரிவுத்துன்பங்கள் போன்ற அனைத்துத் துயரங்களையும் போக்குவதற்காக பலவகைப்பட்ட அன்பர்களும் அடியார்களும் ஒன்றுகூடி பயனடைந்து வருகின்ற சந்நிதிதானமாக சந்நிதிஆலயம் விளங்கிவருகின்றது.

மேலும் சந்நிதி ஆலயத்தைப் பொறுத்தவரை எந்தநேரத்திலும் எப்படிப்பட்ட துன்பத்தில் உள்ளவர்களும் ஆலயத்திற்குச் சென்று வழிபாடு செலுத்தி பயன் பெறக்கூடியதான அமைப்பும், எளிமையும், நெகிழ்ச்சித் தன்மையும் கொண்டதாகவிளங்கிக் கொண்டிருப்பதும் அதன் தனித்துவமென்றே கூற வேண்டும்.

அதுமட்டுமன்றி உலகியல் வாழ்க்கையில் பல்வேறு வகைப்பட்ட செல்வங்களையும்அடியார்களுக்கு அள்ளி வழங்குவதிலும் அவனுக்கு நிகர் அவனே என்று அடியார்கள் கூட்டம் அகமகிழ்வுடன் அவனை நாடிவந்து கொண்டிருப்பதையும் அங்கே காணமுடிகின்றது.

இத்தகைய புனிதத்தையும், சிறப்புக்களையும் அடியார்கள் அறிந்து கொண்டிருப்பது போலவே சந்நிதியான் ஆச்சிரமமும் அதனோடிணைந்த சைவ கலை பண்பாட்டுப்பேரவையும் ஆழமாக உணர்ந்துகொண்டிருப்பதில் வியப்பேதுமில்லை அது மட்டுமன்றி இவை முன்னெடுக்கின்ற செயற்பாடுகள் ஒவ்வொன்றுமே சந்நிதியானுடைய ஆழமான அனுக்கிரகத்தினை அடிப்படையாகக் கொண்டே முன்

னெடுக்கப்படுகின்றன என்பதும் மிகமுக்கியமான விடயமாகும்.

சந்நிதி ஆலயத்தில் ஆலம் இலைகளில் படைக்கப்படுகின்ற அமுதினை ஆலயப் பூசகர்கள் அடியார்களுக்கும் வழங்கி அவர்களது பசிப்பிணியைப் போக்கி வருவது இங்கே பின்பற்றப்படும் மரபாகும். இந்த நடைமுறையைப் பின்பற்றித்தான் ஆலயச் சூழலிலும் மடங்கள் ஆரம்பிக்கப்பட்டு அங்கேயும் அன்னதானம் வழங்கும் நடைமுறை விரிவடைந்துள்ளது. இதே போலத்தான் சந்நிதிமுருகன் ஒரு வைத்தியநாதனாகவும் அடியார்களால் கருதப்படுகின்றான். சாதாரண நோய்நொடி தொடக்கம் வைத்தியர்களால் கைவிடப்பட்ட நோயாளர்கள் வரை பல வகைப்பட்ட நோய்களுக்கும் அடியார்கள் ஆலயத்திற்கு வந்து தமது நோய்களை மாற்றிச் செல்கின்ற வரலாறு இன்றும் நடைபெற்று வருகின்றது இந்தக் கட்டுரையை எழுதிக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில்கூட பருத்தித்துறை தும்பளையைச் சேர்ந்த 23 வயது மதிக்கத்தக்க இளைஞருடைய வருத்தம் தொடர்பாக அந்த இளைஞரும் அவரது தாயும் ஆலயத்திற்கு வருகைதந்து (அமரத்துவமடைந்த ஓய்வுபெற்ற பிரதேச செயலர் முருகேசம் பிள்ளையின் உறவினர்கள்) ஆலயத்தொண்டு செய்து அங்கே வழங்கப்படுகின்ற அமுதினை உட்கொண்டு ஆலயத்திலேயே தங்கியிருப்பதையும் காணமுடிகின்றது.

இத்தகைய சூழ்நிலையில் சந்நிதி ஆலயச்சூழலில் இருந்து சந்நிதியானுடைய அனுக்கிரகத்துடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் சந்நிதியான் ஆச்சிரமமும் மனிதநேயம் கருதி ஆலயச்சூழலில் உள்ள அடியார்களுக்காகவும், அன்பர்களுக்காகவும் மட்டுமன்றி வைத்தியவசதி இல்லாது ஆலயச்சூழலில் உள்ள கிராம மக்களுக்காகவும் இலவச வைத்திய சேவையை வழங்கும் பணியை மேற்கொள்ள ஆரம்பித்தது.

சைவசமய நிறுவனங்கள் சமயத்தொண்டினை மட்டுமன்றி சமூகத்தொண்டினையும் தேவையறிந்து மேற்கொள்ள வேண்டுமென்ற நல்ல சிந்தனைக்கிணங்கவும், சந்நிதியானுடைய அனுக்கிரகத்துடனும் சிறிய அளவில் பொது வைத்திய சேவையாக ஆரம்பிக்கப்பட்ட, வைத்திய சேவை இன்று பலவகையிலும் பலரும் வியக்கத்தக்க அளவில் சிறப்புப்பெற்றுள்ள அதேவேளை தன்னடக்கத்துடன் தனித்துவமான சேவையை வழங்கிவருவதும் குறிப்பிடத்தக்கது.

பிரதி ஞாயிறு தோறும் பொது வைத்திய சேவையும்,

குறிப்பிட்ட ஒழுங்கில் மகப்பேற்று நிபுணரினால் மகப்பேற்று வைத்திய சேவையும், காலத்திற்கு காலம் கண்வைத்திய சேவையும் கண்ணாடி வழங்கும் நிகழ்வும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறுகின்றது.

பொது வைத்திய சேவை பிரதி ஞாயிறு தோறும் மாலை 2-30 மணிதொடக்கம் 5-30மணி வரை இடம்பெறுகின்றது. வைத்திய பரிசோதனை இலவசமாக மேற்கொள்ளப்படுவதைப் போன்று வைத்தியரால் குறிப்பிடப்படும் மருந்துகள் எவ்வளவு பெறுமதி உள்ளதாக இருந்தாலும் அவை ஆச்சிரமத்தால் இலவசமாகவே வழங்கப்படுகிறது. வைத்தியசேவை 14-10-2001ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து 8719 நோயாளர்கள் சிகிச்சைபெற்றுள்ள அதேநேரம் மூன்று இலட்சத்து ஏழாயிரத்துஐம்பது ரூபா மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

வைத்தியசேவையினை ஞான பண்டித சேவாசுரபி வைத்திய கலாநிதி சி. கதிரவேற்பிள்ளை அவர்கள் ஆரம்பித்துவைக்க மந்திகை ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றி தற்பொழுது ஓய்வு பெற்றிருக்கும் உதவிவைத்திய அதிகாரி M. யோகேஸ்வர தேவன் அவர்கள் அன்று தொடக்கம் இன்றுவரை தொடர்ச்சியாக அதனைச் செயற்படுத்தி வருகின்றார்கள். திரு. M. யோகேஸ்வர தேவன் அவர்கள் தனது வைத்திய சேவையை ஒரு இறை தொண்டாகக் கருதி இலவசமாக அதே நேரம் இன்முகத்துடன் இடைவிடாது வழங்கி வருவது அவரின் தர்மசிந்தனையை வெளிப்படுத்தும்ஒரு விடயமாக உள்ளதாக எம்மால் உணர முடிகின்றது.

ஆச்சிரமத்தின் சுவாமிகள் வைத்தியசேவையைப் பெற வருகின்றவர்களின் பெயர்களைப் பதிவு செய்து பெயர்கள் பொறிக்கப்பட்ட சிட்டைகளை தானே எழுதி அவர்களுக்கு வழங்கி வைத்திய சேவையை ஒழுங்குபடுத்தி நெறிப்படுத்தி வருகின்றார்கள்.

அடியார்களுக்கு அன்ன தானம் வழங்கும் நிகழ்வை நேர்த்தியாகவும், நிதானமாகவும் மேற்கொள்ளும் அதே ஆச்சிரமத்தின் இளைஞர்கள் தான் வைத்தியர் குறிப்பிடும் மருந்துக்களையும் நோயாளர்களுக்கு சரியாகவும், துரிதமாகவும் வழங்குவது பலரையும் வியப்படையச் செய்யும் விடயமாக உள்ளது.

உண்மையில் இவ்வாறு வைத்தியசேவை வழங்கப்படும் அந்த நாட்கள் குறிப்பாக அந்தநேரம் ஆச்சிரமத்தினுடைய சூழல் ஒரு

★ நட்புக் கொள்வதில் நிதானம் வேண்டும். ★

வைத்தியசாலைக்குரிய செயற் பாடுகளைக் கொண்ட கவிநிலையைப் பெற்று ஒரு வைத்திய சாலையைப் போலவும் ஆச்சிர மத்தில் உள்ள உள்ளங்கள் அனைத்தும் தூய வைத்திய சேவைக்குரிய செயற்பாடுகளை மேற்கொள்ளும் அன்பு உள்ளங் களாகவும் செயற்படுவது எவரது மனங்களையும் கவருகின்ற அதே நேரம் உள்ளத்தை உருக்குகின்ற காட்சிகளாக அமைந்திருக்கும்.

யோகர்சுவாமிகள் இந்த ஆலயத்திற்கு வருகை தந்த பொழுது ''எங்கு பார்த்தாலும் சிவலிங்கங்கள்தென்படுவதுபோன்ற புனிதம் நிறைந்த புண்ணிய . பூமியாக இந்தஇடம் காட்சியளிக்கின்றதே இங்கே எனது பாதங்களை வைப்பதற்கு எனது மனசு கூசுகின்றதே'' என்று எப்போதோ தனது ஞானக் கண்ணினால் கண்டு கொண்ட புனிதம் நிறைந்த புண்ணிய பூமி அல்லவா இந்த சந்நிதிச்சூழல்.

ஆம்! கருவிமட்டும் தானே நாங்கள். இங்கே நடைபெறும் காரியங்கள் அனைத்திற்கும் காரணமாக அமைந்திருப்பதெல்லாம் சந்நிதியான் தானே!

ஓம் முருகா!

(தொடரும்...

★★★★★

வாழ்க்கை சிரமமானதாக ஆகிவிட்டது விலைவாசிகள் உயர்ந்து விட்டன அதனால் சாதாரண வசதிகள் கிடைப்பதும் கஸ்டமாக இருக்கிறது. இதற்கு என்னகாரணம்? மனிதன் தன்னுடைய மதிப்பைக் குறைத்துக்கொண்டது தான். மனிதன் தாழ்மையாக இறங்கி விட்டால் பிறபொருட்களின் விலை உயர்வைத் தடுக்கவே முடியாது. மனிதன் தனது உண்மையான மதிப்பை முதலில் உணர வேண்டும் விலை மதிப்பில்லாத ஆத்மா. அழிவில்லாத ஆத்மா அவனுள் உறைந்திருப்பதை உணர வேண்டும் அதேபோல எல்லா உயிர்களிடத்தும் இறைவன் உறைந்திருப்பதை உணர வேண்டும் அப்போது உயர்வு தாழ்வு, ஜாதி வித்தியாசம் ஆகியவை மனிதனைப் பிரிக்க முடியாது. ஒற்றுமை உண்டானால் அங்கே தியாக மனப்பான்மையும் உண்டாகும் தியாக மனப்பான்மை வந்துவிட்டால் துரோகம் செய்யவே தோன்றாது ஆசைகளின் மீதும் பற்று வராது. தியாகத்தை விரும்பி வாழுங்கள் போகத்தை விரும்பி வாழாதீர்கள். பாபா

உ

# அரை நிமிட நேரம்

சி. யோகேஸ்வரி

ஆறுமுகனின் மலர்ப்பதத்தைத் துதிக்கும்பேறு எம் அனைவருக்கும் கிட்டுவதில்லை. அரை நிமிட நேரங்கூட தியானிக்க முடியாத மூடர்கள் நாம். ஆனால் அந்தப் பொற்பதத்தினைத் துதிக்கும் பக்தர்கள் பேறு பெற்றவர்கள்

எம்மால் திருமுருகனின் பதத்தைத்தான் தியானிக்க முடியவில்லை. அவனது பக்தர்களைப் பற்றியாவது சிந்திக்கலாமல்லவா? அந்த அடியவர்களது பெருமையையாவது பேசி வியந்து நெக்குருகி நிற்கலாமல்லவா?

பெரியது எதுவெனக் கூற வந்த ஔவையார். இறைவன் தொண்டரது உள்ளத்துள் ஒடுங்கி விடுவதனால் தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே என்று கூறியுள்ளார்.

'' பெரியது கேட்கின் தனி நெடுவேலோய் '' என அந்த வேலவனை விளித்து ஔவையார் இவ்வாறு பாடியுள்ளது அனைவரும் அறிந்ததாகும், '' இறைவன் அடியவரது உள்ளத்துள் உறைகின்றான். தொண்டரது உள்ளக் கமலத்தையே உவந்து வேண்டுகின்றான் '' என்றெல்லாம் பலரும் பலவாறு இக் கருத்தை வலியுறுத்தியுள்ளனர்.

இறைவனது அடியார்களுக்குத் தொண்டு செய்வது இறைவனுக்குத் தொண்டு செய்வதையொத்ததெனப் பணி செய்த காலம் இன்று மாறி விட்டது. மீண்டும் அந்த எண்ணம் எம்மிடையே தோன்ற வேண்டும்.

பொற்பதத்தினைத் துதிக்கும் பக்தர் நற்கதியடைவர். இறைவனது திருவடியை அடைவர். அவர்களது சிறப்பை உரைக்கும் போதே நாம் நெக்குருகி நிற்க வேண்டும். பக்தி நிறைந்த அவர்களைப் பற்றி அறியும் போது அந்தப் பக்தி மயம் எம்மையும் நெக்குருகச் செய்ய வேண்டும். ஆனால் அப்படி பக்தர்களது புகழ் பேசி நெக்குருகி நிற்கவும் எமக்குத் தெரியவில்லையே இவற்றை அறியாத நாம் எப்படிக் கடைத்தேறப் போகின்றோம்?

★ மற்றவர் வாழ்க்கையை வருத்தி மகிழாதே ★

முருகனையும் முருகனடியார்களையும் வருத்தி வணங்குவோராக நாம் மாற வேண்டும். காலை முதல் இரவு வரை எவ்வளவு நேரத்தைப் பேசிச் செலவிடுகின்றோம்! ஆனால் நாம் பேச அறியா போனதைத்திருப்புகழ் பின்வருமாறு கூறுகின்றது

பொற்பதத்தி னைத்துதித்து
நற்பதத்தி லுற்ற பத்தர்
பொற்புரைத்து நெக்குருக வறியாதே. (திருப்புகழ்)

## அருணகிரிநாதர் விழா

சந்நிதியான் ஆச்சிரம சைவ. கலை, பண்பாட்டுப் பேரவை, யாழ்ப்பாணம் புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தின் அனுசரணையுடன் வருடா வருடம் நிகழ்த்திக் கொண்டுவரும் அருணகிரி நாதர் விழா 13 - 07 - 2003 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9 - 30 மணியளவில் தொடங்கி, வெகு கோலகலமாகச், சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்றது.

விழாவுக்குத் தலைமை வகித்த, பிரம்மஸ்ரீ காரை. கு. சிவராஜ சர்மா அவர்கள் சும்மா இரு சொல்லற எனும் அருள்வாக்கை ஸ்ரீ முருகப்பெருமானிடம் பெற்ற அருணகிரிநாதர் ஞானபண்டிதராகிய ஸ்ரீமுருகப் பெருமானின் திருவருளினால் பரஞானம் கைவரப் பெற்றவரென்றும் அவர் பாசஞானம், பசு ஞானம் நீங்கியவராய்ப் பதி ஞானம் உடையவராய் விளங்கியவரென்றும் குறிப்பிட்டார்கள்.

அடுத்து யாழ் மாநில - இந்து கலாசார அமைச்சு - உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் அவர்கள் தமது சொற்பொழிவினிடமாக கந்தரனுபூதி பெற்ற அருணகிரிநாதர் அருளிச் செய்த கந்தரனுபூதியானது ஐம்பத்தொரு மந்திரங்கள் போன்றதென்றும் அவரருளிய திருப்புகழை ஓதுவது வேதபாராயணம் செய்வதிலும்பார்க்க, கலைகள் வித்தைகள் பயில்வதிலும் பார்க்க கீத ஞானம் பெறுவதிலும் பார்க்க மேலான பலனைத்தருவதாகும் என்றும் குறிப்பிட்டார்கள்.

அடுத்து, திருப்புகழ்மணி K. S. R. திருஞானசம்பந்தன் அவர்கள் கானாமிர்தமாக திருப்புகழ் பாடல்களை வழங்கி, மெய்யடியார்களைப் பக்தி பரவச நிலைக்கு ஆக்கினார்கள். இறுதி நிகழ்வாக பேரவையினரால் நன்றியுரையும், மாகேசுர பூசை நிகழ்வும் இடம் பெற்று விழா இனிது முடிவடைந்தது.

★ அறத்தை விளங்க வைப்பது அன்பு ★

# யோகதாஸன் பாடல்கள்

அமரர் ஸ்ரீ யோகர்ஸ்வாமிகளின் பக்தன் ஊரிக்காடு இசை மாமணி, சங்கீத வித்துவான் திரு. அ. நடராஜா அவர்களின் வழி காட்டலின் கீழ் அவருடைய மகளும் [ யா / உடுப்பிட்டி மளிகர் கல் லூரிஆசிரியையுமாகிய திருமதி பிராணேஸ்வரி சிதம்பரப்பிள்ளை அவர் கள் வெளியிடும் கர்நாடக சங்கீத இசை உருப்படிகளின் வெளியீடு.

கீர்த்தனை 1

இராகம்:- கௌளை பல்லவி தாளம் ; ஆதி

வாவா கணபதியே - வரம்தந்து
காவாய் குணபதியே - கந்தன்சகோதர [ வாவா ]

அனுபல்லவி

மூவா முதலே மூலப் பொருளே
மூக்ஷிக வாகன மோதகப்ரியரே [ வாவா ]

சரணம்

பத்ம நாபன் மருகா நித்யானந்தயோக
பக்தர்களின் பொய்யா வித்தைக்கருள் மெய்யா
எத்தினமும் உந்தன் இணையடி தொழுதேன்
பக்திக்கு உவந்தருள்வாய் சித்தி விநாயக [ வாவா ]

இராகம் :- சுத்தஸாவேரி கீர்த்தனை-2 தாளம்:- ஆதி

பல்லவி

காவாத காரணம் ஏனோ காபாலி ( காவாத )

அனுபல்லவி

முத்தமிழ் அழகனாம் முருகனின் தாதையே
முப்புரம் எரி செய்த முக்கண்ணரே

சிட்டைஸ்வரம்

ஸ்தாதபமபத மதபம பமரிரி | ஸா;;ரிம | பததப - பமபத
ஸ்ரிஸ் தாஸ்தப - பதஸ்பாமபத | ரிமபபாமரிஸ | தஸரிமபா,
தஸ்ரி தஸ்ரீரி பதஸ் பதஸ்ரஸ் | மபதமபதாத | பமரிமபா:
தஸ்ரிஸ்ரிஸ் ரிஸ் ததஸ் ததஸ்தப | தரிதாஸ்பாத | மாபரீமபத;
-(காவாத)

சரணம்

கல்லேனும் ஒரு காலத்திலே உருகும்
கல்நெஞ்சம் உருகக் கருணை மழை பொழிவாய்
பல்லுயிர்க் காதாரா பரம கிரு பாகரா
பாலன் யோகதாஸன் பாடற் கிரங்க இன்னும்
(சிட்டைஸ்வரத்தைப் பாடி முடிக்கவும்)



உ

சிவமயம்

## மயில்வாகன சுவாமிகளின்

# 18வது ஆண்டு குருபூசைத்தினம்

சந்நிதியானைத் தரிசிக்க வருகின்ற அடியார்களுக்கு அன்ன தானத் தொண்டை மேற்கொண்டு அடியார்க்கு அடியானாக விளங்கிய சுவாமிகளே; மயில்வாகன சுவாமிகளாவார். அன்னாருடைய 18 - வது குருபூசைத்தினம் 04 - 08 - 2003 திங்கட்கிழமை ஆச்சிரமத்தில் வழமைபோல பக்திபூர்வமாக நடைபெறவுள்ளது.

குருபூசைத் தினத்தையொட்டி ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் விஷேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து ஆச்சிரமத்தில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் தலைமையில் விழா இனிது நடைபெறவுள்ளது.

## குருபூசைத்தின நிகழ்வுகள்

சிறப்புச் சொற்பொழிவு:- செஞ்சொற் செல்வர்
திரு. ஆறு. திருமுருகன்

போட்டியில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பேச்சு வன்மை.

பார்வைக் குறைபாடு உடைய மாணவர்களுக்கு கண்ணாடி வழங்கும் நிகழ்வு.

வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட இரு மாணவிகளுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தினால் துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்

**வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட குடும்பம் ஒன்றிற்கு லண்டன் சிவயோகம் நிறுவனத்தின் அனுசரணையுடன்தையல் இயந்திரம் வழங்கல்.**

பேச்சுப் போட்டி 27 - 07 - 2003 ஞாயிற்றுக்கிழமை நடாத்தப்பட்டு 04 - 08 - 2003 நடைபெறும் குருபூசைத்தினத்தில் வழமை போல பணம், சான்றிதழ் பரிசு என்பன வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வழங்கப்படும்.

போட்டியில் பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் வழமை போல் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

## "தோத்திரங்களை மிளிரவைத்த காத்திரமான இசைச்சக்கரவர்த்தி"

அளவையில் இருந்து அகில உலகத்தையும்
அமுதான நாதஸ்வரத்தால் நனைத்த
கலாநிதி என்கே பத்மநாதன் என்றும்
காத்திரமான இசைச் சக்கரவர்த்தியே

## அனைவருக்கும் "என்கேயே" பாரி

எங்கே என்கே? எங்கே என்கே?
எங்கே! உலகின் நாதம் என்கே!
என்கே இசையோ மாரி மல்லாரி
இங்கோ அனைவர்க்கும் என்கேயே பாரி!

கே. எஸ். சிவஞானராசா

# ஆவணி மாத வாராந்த நிகழ்வுகள்

1 - 8 - 2003 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை :- திரு சி. சி. வரதராசா J. P.

**விடயம் :- வில்லுப்பாட்டு ' வள்ளிதிருமணம் '**

வழங்குபவர் :- சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்

---

8 - 8 - 2003 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

**விடயம் :- மாணவர்கள் உரை**

செல்வன் கந்தையா ரவிகாந் - சைவசமயத்தின் வளர்ச்சி
செல்வி ரமணி தேவராசா - நாயன்மார்களின் வழி
செல்வி சர்மிலா சிவபாதம் - பண்ணிசை
செல்வி ஜெயகௌரி செல்வம் - பண்ணிசை
(சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்கள்)

செல்வன் செல்வரெத்தினம் சுரேஸ்கரன் - இந்துதர்மம்
( ஸ்கந்தவரோதயக் கல்லூரி )

---

15 - 8 - 2003 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை :- திரு வே. தர்மராசா ( பொது முகா. )

**சொற்பொழிவு :- ' அமாவாசையில் பூரணை '**

வழங்குபவர் :- சிவத்திரு வ. குமாரசாமி ஐயர்

---

22 - 8 - 2003 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

அறிமுகவுரை :- திரு இ. சொக்கலிங்கம் ( இளை. ஆசிரியர் )

**சொற்பொழிவு :- "பெரியபுராணம்" ( தொடர் )**

வழங்குபவர் :- சிரேஷ்ட விரிவுரையாளர் அ. குமாரவேல்
( யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை )

---

29 - 8 - 2003 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 - 30 மணியளவில்

# ஞானச்சுடர் மாத வெளியீடு

# ஆவணி - 2003

வெளியீட்டுரை :- இளம் சைவப்புலவர்
செல்வி சசிகலா கனகசுந்தரம்பிள்ளை

மதிப்புரை :- திருமதி மங்கையர்க்கரசி சிற்றம்பலம்
( இளை. அதிபர், இராமநாதன் கல்லூரி )

பதிவு இலக்கம்;- *Q. D. / 58 / NEWS / 2003*

## வாசகர் போட்டி

முதல் பத்து மலரிலும் ( 2003 ஜனவரி- ஒக்டோபர் ) வெளியிடப்படும் விடயங்களை உள்ளடக்கியதாக வாசகர் இடையே போட்டி ஒன்று நடைபெறவுள்ளது. இப்போட்டியில் வெற்றி பெறுவோருக்கு வழமைபோல பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டி தொடர்பான விபரங்கள் நவம்பர் மாத இதழில் வெளியிடப்பட்டு போட்டி நடாத்தப்பட்டபின் அதுபற்றிய முடிவுகள் 2004 ஜனவரி மலரில் வெளியிடப்படும்.

## அன்பான வேண்டுகோள்

மலருக்குப் பொருத்தமான, தரமான சொந்த ஆக்கங்களை இலகு தமிழில் எழுதி எமக்கு அனுப்பி வைக்குமாறு சமயப் பெரியார்களையும், அறிஞர் பெருமக்களையும். அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மலர்க் குழு:
**சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை**
*செல்வச்சந்நிதி தொண்டைமானாறு*